# காஷ்மீரம்



492
44233
492
V247
N53
108726

லிங்கம் & கம்பெனி
டபம் மதுரை....

# காஷ்மீரம்

ஆசிரியர்கள் :
பண்டித நா. லக்ஷ்மி நரசிம்மன்,
தலைமைத் தமிழாசிரியர்,
பி. கே. நாடார் உயர்நிலைப்பள்ளி, திருமங்கலம்.

நா. பாலுசாமி, M.A.,
தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

வெளியிடுபவர் :
A. T. N. நாகலிங்கம் & கம்பெனி,
புதுமண்டபம் :: மதுரை.

உரிமை
பதிவு செய்யப்பட்டது

1953

விலை அணா 15

முதற்பதிப்பு—அக்டோபர், 1953

Kabeer Printing Works, Madras (2347)

# முன்னுரை

ஒரு நாட்டின் வரலாறு, அதன் இயற்கைச் செல்வம், சமுதாயப் பண்பு, வாழ்க்கை, இலக்கியம், கலை, தொழில் முதலிய பல வகைப்பட்ட உண்மைகளையும் விளக்குவதாகும். மாணவர், பல்வேறு நாடுகளைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அறிவதால், பரந்த அறிவும் விரிந்த நோக்கும் கொள்வர். தமிழ் மொழியில் அம்முறையில் அமைந்த வரலாற்று நூல்கள் மிகச்சிலவே. அத்துறையில் தமிழ் நூல்கள் பெருக வேண்டும் என்னும் நோக்குடன் இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. காஷ்மீரம் இயற்கை எழில் தவழும் ஓர் இனிய பூம்பொழில். கலை மணமும், கவி மணமும் சிறந்து விளங்கிய அதன் பழைய வரலாறும், அழகுமிக்க அதன் இயற்கைத் தோற்றங்களும் இச்சிறு நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கற்பாருக்குச் சுவை தரும் செந்தமிழ் நடையில் இஃது எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் அதிகாரிகளும் இதனை ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

இந்நூலைத் தங்கள் வெளியீடாகக் கொண்டு வெளியிட்டுள்ள மதுரை A. T. N. நாகலிங்கம் அண்டு கம்பெனியாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

ஆசிரியர்கள்

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றமும் தொன்மையும் | ... | 5 |
| 2. | பழங்கோயில்கள் | ... | 24 |
| 3. | மலை வளம் | ... | 34 |
| 4. | நில வளம் | ... | 49 |
| 5. | நீர் வளம் | ... | 66 |
| 6. | தொழில்கள் | ... | 82 |
| 7. | மக்கள் வாழ்க்கை | ... | 93 |

# காஷ்மீரம்

## 1. தோற்றமும் தொன்மையும்

### எழில் மிக்க வளநாடு

ஒரு நாடு வளநாடாய்த் திகழ வேண்டுமாயின், அதற்கு மலை வளமும், மழை வளமும், நீர் நிலைகளும், நெடிய அரணும் இன்றியமையாதன. அத்தகைய வளநாடுகள் உலகில் மிகச் சிலவே. அச்சிலவற்றுள்ளும் பிறவற்றிற்கு இல்லாப் பெருஞ்சிறப்புக்கள் பல உடையது காஷ்மீர நாடு. அது புராணப் புகழும் வரலாற்றுப் பெருமையும் உடையது; நம் பாரதநாட்டின் மணிமகுடம் போல விளங்கும் வனப்புடையது. ஆதலின், அதன் வரலாற்றையறிதல் நம்மவர்க்குப் பெரும்பயன் விளைப்பதாகும்.

காஷ்மீரம், இயற்கையரசி தன் எழிற்கோலங்களால் இன்பப் பேரொளி பரப்பிக் களிநடம் புரியும் கலையரங்கெனத் திகழ்வது; நிலமகளின் புன்னகை தவழும் மலர் முகம் எனத்

தகும் மாண்புடையது; உலகிலேயே காட்சிக்கினிய கவின் பொங்கும் பூம்பொழில் என்னும் புகழுடையது. அது நம் நாட்டின் வடதிசைக்கண் இயற்கை வரம்பாய் நின்று, இயற்கையின் வரம்பற்ற பேராற்றல்களைக் காண்பவர் மருளக் காட்டி, விண் முட்ட நிமிர்ந்து நிற்கும் இமயமால்வரைச் சூழலிடையே விளங்குவது. வியன்பெரு மலைகளும், கவின் பெறு காடுகளும், மலர்ச் சோலைகளும், இன்சுவைக் கனித் தோட்டங்களும், பேராறுகளும், நீர் வாவிகளும் காஷ்மீரத்தின் இயற்கைத் தோற்றங்களுட்சிலவாம். இவைகளையன்றி, அக்கலைக் கோயிலில் தோன்றிய கலைஞர்களாலும் காவல் மன்னர்களாலும் அமைந்த செயற்கைக் காட்சிகளும் பலவாம்.

## கலைச்செல்வம்

இயற்கையே இன்கலைகளுக்குப் பிறப்பிடம். எனவே, இயற்கை எழில் மிக்க காஷ்மீரம், கலை வளத்திலும் கவிதைச் செல்வத்திலும் சிறந்து விளங்கியது. அங்குக் கலைஞர்களும் கவிஞர்களும் பெருகி வாழ்ந்தார்கள். அந்நாளில், அந்நாட்டு மக்கள் பிராகிருத மொழியும், அறிஞர்கள் வடமொழியும் பேசினர்கள். வடமொழியில் நூல்கள் பல தோன்றின. புராணம், காவியம், நாடகம் முதலிய துறைகளில் அதன்

இலக்கியச் செல்வம் வளர்ந்தது. கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் **கல்ஹணர்** எழுதிய **ராஜதரங்கிணி** என்னும் நூல், பல மொழிகளில் பெயர்க்கப்பெற்றது. அஃது அந்நாட்டை ஆண்ட அரசர்களின் வரலாற்றைக் கூறுவது. **பீமபட்டர்** என்ற கவிஞர் இயற்றிய '**இராவணுர்ஜுநீயம்**' என்னும் நூலும், **தாமோதரகுத்தர்** இயற்றிய '**குர்த்துவின் மடம்**' என்ற நூலும், **வல்லபதேவர்** வரைந்த **காளிதாச வியாக்கியானமும்**, **சோமதேவர்** என்ற பேரறிஞர் எழுதிய **கதாசரித்சாகரம்** என்ற நூலும் புகழ்வாய்ந்தவை. இவற்றுள் **கதா சரித்சாகரம்** உலகிலுள்ள பல மொழிகளிலும் பல வேறு பெயர்களுடன் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளது.

வடமொழிக்கு இலக்கணம் வகுத்துப் புகழ் பெற்றவர் **பாணினியார்**. அவர் எழுதிய இலக்கணத்திற்கு உரை வகுத்த பேராசியர் **பதஞ்சலியார்** என்பவர். இப்பதஞ்சலியார் காஷ்மீரில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. **சரகர்** என்ற மருத்துவக் கலைஞரும் அந்நாட்டில் வாழ்ந்தவரே. அவர் எழுதிய மருத்துவநூல் பல நாடுகளிலும் பரவியுள்ளது. அத்துவித நெறியை நிலையிட்டு அகிலப் புகழ்கொண்ட **ஆதிசங்கரர்**, காஷ்மீரம் சென்று, பல்வேறு சமயங்களைச் சார்ந்த சான்றோர்களையும் சொற்போரில்

வென்று, 'அனைத்தும் அறிந்தவர்' என்ற விழுச்சீர் பெற்றுர் என வரலாறு கூறுகிறது.

## விந்தைக் கதைகள்

காஷ்மீரம் பற்றி அறியக்கிடக்கும் விந்தை மிகுந்த வரலாறுகள் பல. இயற்கையிலே திளைத்த கவிஞர்களுடைய கருத்துக்கள் கற்பனை அழகுடன் கவிதை வடிவில் வெளிப்படும்பொழுது விந்தை மிகுந்த புனைந்துரையாகவே தோன்றும். அவ்வாறே காஷ்மீரத்தின் பழைய வரலாறும் இன்று கருதப்படுகின்றது. வரலாற்றுக்கு அப்-பாற்பட்ட செய்திகளையெல்லாம் இன்றைய உலகம் அவ்வாறே கருதிவிடுகிறது. எனினும், நடுவு நிலை பிறழாது நின்று, அதன் பழைய வரலாற்றை ஒருவாறு அறிய முயல்வோம் :

மக்கள் இயற்கையின் ஆற்றல்களை உணரத் தொடங்கிய பொழுதே அவை பற்றிய விந்தைச் செய்திகளைக் கூறி மகிழ்ந்தார்கள். எத்தகைய உண்மையும் உள்ளவாறே கூறப்படுவதினும் கதை வடிவில் கற்பனை கலந்து கூறப்படுவதே மக்கள் மனத்தில் நிலைத்து நிற்கும் என்பது உலகறிந்த உண்மை. அம்முறையில் காஷ்மீரம் பற்றிய கதைகளும் பல. வழிவழித் தோன்றி வளர்ந்த கதைகளின் தொகுதிகளே 'புராணங்-கள்' எனப்பட்டன. மிக்க பழைமை வாய்ந்த

நாடுகளிலெல்லாம் இத்தகைய புராணங்கள் பல உண்டு. அம்முறையில் காஷ்மீர நாட்டு நூல்கள், அதன் தோற்றம் பற்றிக் கூறும் செய்திகள் பல. ராஜ தரங்கிணி என்னும் நூலின் ஆசிரியர், 'காஷ்மீரத்தை அழகுற அமைத்தவர் ஒரு முனிவர்,' என்கிருர். 'அந்த முனிவர் ஒரு பெரிய ஏரியைத் தூர்த்து, ஓர் அழகிய பூந்தோட்டமாக மாற்றிவிட்டார்,' என்பது வரலாறு. இதே கருத்தில் இதற்கு விளக்கமாய் அமைந்த மற்ருெரு புராணக் கதையைக் காண்போம்:

## காஷ்மீரம் தோன்றிய கதை

காஷ்மீரம் அமைந்துள்ள பள்ளத்தாக்கில் ஆதியில் கடல் போலப் பரந்து கிடந்த பெருந்தடாகம் ஒன்று இருந்தது. அத்தடாகம், பார்வதிதேவியார் படகோட்டி விளையாடி மகிழும் இடமாய் அமைந்தது. இறைவியார் விளையாடி மகிழ்தற்கமைந்த அவ்விடத்திலேயே கொடிய அரக்கன் ஒருவன் பாம்புருக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவ்வரக்கன் அக்குளத்தில் பேரலைகளை எழுப்பியும், நச்சுக் காற்றைப் பரப்பியும் இயற்கைச் சூழலின் எழிலையே மாய்த்து வந்தான். அது கண்ட தேவர்கள், அரக்கனை வெளிப்படுத்த எண்ணி, மலையரணுக்குள் தேங்கிக் கிடந்த குளத்து நீரை வற்றச் செய்ய,

ஒரு புறத்தே மலையைக் குடைந்து வழி அமைத்துத் தண்ணீரை வெளியேற்றினார்கள். நீரின் பெரும்பகுதி வெளியேறியபிறகும் அவ்வரக்கன் வெளிப்படாமல், சேற்றுக்குள் பதுங்கிக் கிடந்தான். அது கண்ட பார்வதியம்மையார், தேவர் முயற்சி வெற்றி பெறக் கருதிச் சிறு பாறை ஒன்றைப் பெயர்த்து, அவன் மறைந்து கிடந்த இடத்தை நோக்கி வீசியெறிந்தார். அவ்வளவில் அவ்வரக்கன் மாண்டொழிந்தான். பார்வதி அம்மையார் எறிந்த அந்தச் சிறு குன்றிலேயே இன்று 'ஹரி பர்வதம்' என்னும் மலைக்கோட்டை கம்பீரமாய்க் காட்சியளிக்கின்றது.

இவ்வாறு பேரரக்கன் மாயவே, எஞ்சியிருந்த சிற்றரக்கர் பலரையும் தேவர் கொன்றொழித்தனர். நீர் நிலை இருந்த இடம், வளம் கொழிக்கும் நிலப்பகுதியாய் மாறியது. அங்கு மக்கள் குடியேறி மகிழ்வுடன் வாழத் தொடங்கினார்கள். இவ்வாறு காஷ்மீரம் தோன்றியது. இவ்வரலாற்றை அந்நாட்டுப் பழைய நூல்கள் பலவும் பல வேறு வகையில் விரித்துக் கூறுகின்றன.

காஷ்மீரத்தின் தோற்றம் பற்றிய செய்தியின் உண்மை எவ்வாறாயினும், அந்நாடு இயற்கை எழிலும் வளமும் செறிந்தது என்பதில் யார்க்கும் ஐயமில்லை. முற்கூறிய செய்தி அந்நாட்டின் தோற்றத்திற்கும் முற்பட்ட பழஞ்செய்தி ;

மேலும், மனிதர் முயற்சிக்கு அப்பாற்பட்ட கடவுள் தன்மை கலந்தது. அதன் வரலாற்றுப் பழைமையும் கி. மு. இரண்டாயிரத்துக்கு முற்பட்டதாகவே கருதப்படுகிறது.

## செழுமையின் விளைவு

ஒரு காலத்தில் பாரத நாட்டின் பண்பாட்டிற்கும் புலமைக்கும் உரைகல்லாய் விளங்கிய தொல்புகழ் வாய்ந்த காஷ்மீர வளநாடும், கால சக்கரத்தின் சுழற்சிக்குள் சிக்கி, மாறுபாடுகளை அடையாமற்போகவில்லை. பழம்பெரு நாடுகள் மறைந்து போவதும், புதிய நாடுகள் தோன்றுவதும் உலகம் கண்டு வரும் உண்மைகளாம். அழியாது நிலைத்து நிற்கும் நாடுகள், தம் முன்னைய நிலைக்கு முற்றும் மாறுபட்ட நிலையிற் காட்சியளிப்பதும் இயல்பே. அவ்வாறு முற்றும் மாறுபட்ட தோற்றத்துடன் விளங்கும் நாடுகளுள் காஷ்மீரமும் ஒன்று. அதன் இயற்கை எழிலும் வளமும் அதன் மேன்மைக்குக் காரணமாயினமை போன்றே, அதன் எல்லையற்ற தொல்லைகட்கும் காரணமாயின எனக் கூறலாம்.

அழகும் செழுமையும் எல்லோராலும் விரும்பப்படுவது இயல்பேயன்றோ? எனவே, காஷ்-

மீரத்தைப் போன்ற எழிலும் வளமும் வாய்க்கப் பெருத அயலகத்தே வாழும் மாந்தர், அதனே ஆவலுடன் நோக்குவாராயினர். வளம் குறைந்த தங்கள் நாட்டில் வாழ்ந்து வாடுவதைக்காட்டி-லும் வளம் மிகுந்த காஷ்மீரத்தையே தாயகமாகக் கொண்டு வாழலாம் எனக் கருதிய மக்கள், காலப் போக்கில் கூட்டம் கூட்டமாய் வந்து குடியேறினுர்கள். அவ்வாறு குடியேற விரும்-பாத நாட்டு மன்னர்கள், அதன் வளத்திற்பங்கு கொள்ளக் கருதி, படை கொண்டு வெருட்டினுர்-கள். .புதியவர்களாய்க் குடியேறிய மக்கள், புறப் பகைவர்க்கே துணே நின்ருர்கள். எனவே, போர் தொடங்கியது. இவ்வாறு பல வேறு காலங்களில் போராட்டங்களில் மூழ்கிக் குழப்பம் பெருகித் தன் அழகையும் வளத்தையும் இழந்து, மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்றுத் தழைத்-தோங்கி நிற்பதே அதன் வரலாற்றிற் பெரும்-பகுதியாயிருந்திருக்கின்றது. அதற்கு அயல் நாட்டவரால் நேர்ந்த துன்பம் ஒரு புறமிருக்க, உள் நாட்டிலும் மிதமிஞ்சிய இயற்கை வளத்தால் தற்காப்புக்குரிய வழி வகைகளேத் தேடுவதி-லும் கருத்தின்றி மக்கள் வாழ்ந்ததால் ஏற்பட்ட துன்பமே பெரிதாயிருந்தது. அவர்களது வாழ்க்கை நிலேயே மாற்ருரைப் படையெடுக்கத் தூண்டியது.

காஷ்மீரத்தின் வாழ்வும் தாழ்வும், பெரும்பாலும் அதனை ஆண்ட மன்னர்களையே பொறுத்திருந்தன. காஷ்மீர மன்னர்களுட்பலர் வீரர்களாயும் செங்கோலரசர்களாயும் விளங்கினர். அவ்வரசர்கள் காலத்தில் காஷ்மீரம் வாழ்வு பெற்று விளங்கியது. மற்றும் சில மன்னர்கள் கோழைகளாயும் கொடுங்கோல் மன்னர்களாயும் இருந்தார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்தில் காஷ்மீரம் எல்லையற்ற தொல்லைக்குட்பட்டது என்பதைச் சொல்ல வேண்டுவதேயில்லை.

## மன்னர்கள்

கல்ஹணர் என்பார் இயற்றிய ராஜதரங்கிணி என்னும் நூல் வாயிலாக, **ராஜா தயாகரணன்** என்னும் மன்னவனே முதன்முதல் கி. மு. 2180-ஆம் ஆண்டில் காஷ்மீர் அரசை நிலை நாட்டியவன் என்பது தெரிய வருகிறது. அவன் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டவன். நாட்டின் நல்வாழ்வே அவனது குறிக்கோள். அவன் காலத்தில் நாடு செழித்து விளங்கியது. மக்கள் துன்பமின்றி வாழ்ந்தார்கள். அவனுக்குப்பின் ஆட்சிக்கு வத்த **மேகவாகனன்** என்பவனும், செங்கோல் மன்னனாகவே விளங்கினான். அவனுக்குப் பின் ஆட்சி புரிந்த **ஜயானந்தன்**,

ஜயபிதா என்பவர்களும் நல்லரசர்களே. இவ்வரசர் காலத்தில் நாடு பல வழிகளிலும் முன்னேற்றத்துடன் திகழ்ந்தது.

மேற்கூறிய அரசர்களுக்குப் பிறகு அந்த நாட்டை ஆண்ட மன்னர்களுள் விஜயாதித்தன் என்பவன் மிகச் சிறந்து விளங்கினன். அவன் சான்ருண்மை மிக்க வேந்தன். அவன் தன் நாட்டு மக்கள் நற்பண்பும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் விளங்க வேண்டும் எனக் கருதினன்; 'காஷ்மீர நாடு சான்ருேருடைத்து' எனப் புகழ் பெறவேண்டும் என விரும்பினன். அதற்காக அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமுன் மக்களைக் கூட்டி, "நான் அரசனுக வேண்டுமென்ருல், நாட்டில் யாரும் பொய் புகலக் கூடாது; கொலைத் தொழில் நிகழ்த்தக் கூடாது; பகைவரேயாயினும், பழி வாங்கும் உணர்ச்சியைக் கைவிட வேண்டும்; மக்கள் அன்பும் அருளும் அறமும் கொண்டு வாழ வேண்டும்; மக்கள் இவ்வாறு வாழ்வதை மக்களே கண்காணிக்க வேண்டும். இவற்றில் மக்கள் ஒத்துழைப்பு இல்லையாயின், மறுகணமே யான் அரசைத் துறப்பேன்," என்று நிபந்தனை விதித்து, மக்கள் இணங்கிய பின்னரே மணிமுடி சூட்டிக்கொண்டான் என்று வரலாறு கூறுகிறது. அவன் மக்களுடன் சேர்ந்து, தற்-

பெருமையின்றி, எல்லாத் தொழில்களையும் செய்து வந்தான். இத்தகைய அரசர்கள் ஆட்சிக் காலத்தில் நாடு சிறந்து விளங்கியிருக்கும் என்பதில் ஐயமுண்டோ ?

விஜயாதித்தனுக்குப் பின் வந்த அரசர் சிலர் அவனைப் போன்று நல்லியல்புடையவராய் அமையவில்லை. லலிதாதித்தன் என்ற பேரரசனுக்கு முன் ஆண்ட அவன் தமையன், கொடுங்கோலனாகவே விளங்கினான். அவன் ஆட்சியில் நாடு பல வழிகளிலும் வீழ்ச்சியுற்றது ; நாட்டில் எங்கும் குழப்பம் மிகுந்தது ; நாட்டின் செழுமை வீணாயிற்று. இத்தகைய சீர் கேடான நிலையில் லலிதாதித்தன் அரியணை ஏறினான். அவன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவிற்று. பிறகு அவன் தமையன் ஆட்சியில் ஏற்பட்ட அழிவுகளைப் போக்க முனைந்தான் ; வேளாண்மைக்குரிய வசதிகளைப் பெருக்கினான். கால்வாய்கள் வெட்டப்பட்டன. பாலங்கள் கட்டப்பட்டன. லலிதாதித்தன் பெருவீரனாய் விளங்கியதோடு, அறிஞனாயும் கலைஞனாயும் திகழ்ந்தான் ; தன் நாடு சிறந்து விளங்குவதற்கான பல வழிகளையும் ஆராய்ந்து செய்தமைத்தான் ; நாட்டில் அமைதி நிலவியது. பிறகு அவன் வீரத்தை நிலை நாட்டக் கருதினான் ; வலிமை மிக்க படையொன்றைத் திரட்டினான் ; அதற்குத் தானே

சிறந்த போர்ப் பயிற்சியளித்தான்; அயல் நாடுகளிலும் வெற்றிக்கொடி நாட்டி, ஆங்குள்ள செல்வங்களைக் கொணர்ந்து தன் நாட்டின் செல்வ வளத்தை மேலும் பெருக்கக் கருதினன். அவன் முதலில் **ஆப்கானித்தானத்தை**யும் **துருக்கி**யையும் வென்றான்; பிறகு மத்திய ஆசியாவில் சில பகுதிகளைக் கைக்கொண்டான்; **திபேத்து** நாட்டையும் வென்றான்; திபேத்தின் வழியாகப் பாரத நாட்டிற்குள்ளும் நுழைந்து, பொன்னையும் பொருளையும் அள்ளிச் சென்றான். அவன் இந்தியாவில் விளங்கிய பெருங்கோயில்கள் சிலவற்றைக் கண்டான்; அவற்றின் அமைப்பிலும் சிற்பத் திறமையிலும் ஈடுபட்டான்; அவ்வாறே தன்னாட்டிலும் கோயில்கள் எடுக்க விழைந்தான்; எனவே, இங்கிருந்து கட்டடக் கலை வல்லார் பலரையும் சிற்பம் வல்லார் பலரையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். லலிதாதித்தன் தன் நாட்டின் பல இடங்களில் உறுதி வாய்ந்த கோட்டைகளை அமைத்தான்; அவற்றில் செல்வங்களையும் பிற பொருள்களையும் சேர்த்து வைத்தான். அவன் காலத்தில் காஷ்மீரம் மிகச் சிறந்து விளங்கியது.

லலிதாதித்தனுக்குப் பின் நாட்டின் நிலை தலை கீழாய் மாறியது; அவன் ஆட்சிக்கு வந்த பொழுதிருந்த நிலையினும் தாழ்வுற்றது. இத்-

தாழ்விற்கு அவனுக்குப் பின் வந்த மன்னர்களின் வலிக் குறைவே காரணமாகும். மேலும், லலிதாதித்தனுடைய வெற்றிகளும் ஒரு வகையிற் காரணம் எனக் கூறலாம். லலிதாதித்தன் அடைந்த வெற்றிகளால் நாட்டிற்குச் செல்வம் பெருகியது போன்றே, அதன் அழிவை விரும்பும் பகைவர்களும் பெருகலானார்கள். ஆப்கானிஸ்தானத்திலும் துருக்கியிலும் அவனடைந்த வெற்றிகள், அவன் நாட்டிற்கு அழியாத பகைமையைத் தேடித் தந்தன. லலிதாதித்தனடைந்த வெற்றிகள் ஆண்டுதோறும் காஷ்மீர மக்களால் கொண்டாடப்பட்டு வந்தன. அக்கொண்டாட்டம் பகைவர்க்கு எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று இருந்தது. அவர்கள் காலத்தை எதிர் நோக்கி அடங்கியிருந்தார்கள். லலிதாதித்தனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் வலிமையற்றவராயும் கொடுங்கோலராயும் விளங்கவே, பகைவர் காஷ்மீரத்தைக் கொள்ளையிடத் துணிந்தனர். நாடு பேரிருளில் மூழ்கியது.

ஆனால், அவ்விருள் நீடித்திருக்கவில்லை. காஷ்மீரத்திற்கு மீண்டும் நற்காலம் தோன்றியது. **அவந்தி வர்மன்** என்ற நல்லரசன், ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். குழப்பம் ஒய்ந்தது. பகைவர் அவந்தி வர்மன் வலிமையை உணர்ந்து, அஞ்சியொடுங்கினர். அவன் காலத்தில் நாடு

மீண்டும் புத்துயிர் பெற்றுத் திகழ்ந்தது. அவந்தி வர்மன் கலைப்பற்று மிக்கவன்; கட்டடக்கலையிற் பெருவிருப்புடையவன். எனவே, நாட்டிற் பல இடங்களிலும் அவன் பல பெருங்கட்டடங்களை எழுப்பினன். கற்கோயில்களும் பல கட்டப் பட்டன.

## ஆட்சி மாறுதல்

புகழ் பெற்ற சீன யாத்திரிகரான **ஹியான்-சாங்** நம் நாட்டிற்கு வந்த பொழுது, **துர்லப வர்த்தன்** என்ற மன்னன் காஷ்மீரை ஆண்டு வந்தான். அவன் காலத்தில் குடிகள் அமைதி-யாய் வாழ்ந்தார்கள்; நாடு செழித்தது; இலக்-கியச் செல்வம் பெருகிற்று. அவனுக்குப் பின் ஆண்ட மன்னர்கள் காலத்தில் நாடு மீண்டும் படிப்படியாய்த் தாழ்வுற்றது. கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் **தார்த்தாரிகள்** இந்தியாவில் புகுந்து கொள்ளையடிக்கத் திரண்டார்கள். அச்-சமயம் **ரெண்டுஸென்** என்னும் திபேத்திய அரசகுமாரன், காஷ்மீர் அரசனிடம் அடைக்-கலம் புகுந்தான். அரசன், தன்னிடம் அடைக்-கலம் புகுந்தவனைக் கைவிடலாகாதெனக் கருதி, அவனைத் தக்க பாதுகாப்புடன் ஒரு கோட்டைக்-குள் வைத்து, வேருேர் ஊருக்குச் சென்றிருந்-

தான். ரெண்டுஸென் எப்படியோ படைகளைத் தனக்குட்படுத்திக்கொண்டான்; தானே அரசனைப் போல ஆணை செலுத்தவும் தொடங்கினான். வேற்றூர் சென்ற வேந்தன், இதனைக் கேள்வியுற்றுத் தலைநகரை நோக்கி மீண்டு வரும் வழியில் அவனது சூழ்ச்சியால் மாண்டான். அல்லற்காலத்தில் அடைக்கலமளித்துக் காத்த அரசனை நன்றியின்றிக் கொன்றொழித்த நச்சரவம் போன்ற ரெண்டுஸென், தன் கொடுங்கோலாட்சியைத் தொடங்கினான்; தன் கருத்திற்கிணங்காத அமைச்சர்களை விண்ணவர்க்கு விருந்தாக்கினான். எனவே, அவனை மக்கள் நஞ்சென வெறுத்தார்கள்; அவனது கொடுங்கோன்மையால் கடுந்துயருழந்தார்கள். நாட்டில் குழப்பம் மிகுந்தது. எப்பொழுதும் இத்தகைய வாய்ப்பை எதிர் நோக்கி நின்ற பகைவர்க்குக் கொண்டாட்டம் உண்டாயிற்று. அப்பகைவர் அவனுக்கு உற்ற நண்பராயினர். அவனுக்குப் பின் காஷ்மீரத்தில் சுல்தான்களின் ஆட்சி தொடங்கியது.

## இருளில் ஒளி

ரெண்டுஸென் காலத்தில் நாடு சொல்ல ஒண்ணுத் துன்பத்துள் ஆழ்ந்தது; நாடெங்கும் தொல்லைகள் பெருகின; உள்நாட்டுப் போர்கள் ஒய்வின்றி நடந்தன. அவனுக்குப் பின்வந்த சுல்தான்களுட்பலரும் அவனைப் போன்றே கொடுங்கோலாட்சி புரிந்தனர். அரச மரபு அடிக்கடி மாறியது. வலி மிக்கவர், வலி குறைந்தவர்களைக் கொன்றெழித்து, அரசைக் கைப்பற்றினர். இந்நிலையில் காரிருளில் மின்னெளி தோன்றுவது போல, அவர்களிலும் நல்லரசர் ஒருசிலர் தோன்றினர். **சுல்தான் ஜைன்-உல்-அபிதீன்** என்பவன் அத்தகைய நல்லரசர்களுள் ஒருவன். அறமே அவன் கொள்கை. அவன் மக்களின் நன்மையே குறிக்கோளாகக்கொண்டு ஆட்சி புரிந்தான். தொழில்கள் பெருகின. நாட்டு மக்கள் முன் பட்ட துன்பங்களை மறந்து, மகிழ்ச்சியுடன் வாழலானுர்கள். குடிகள் அவ்வரசனை மனமாரப் புகழ்ந்து வாழ்த்திஞர்கள். கவிஞர் அவனைப் புகழ்ந்து கவிதை புனைந்தனர். **ஷேக்கு நூருத்தீன்** என்பவர், அவ்வரசன் அவ்வப்பொழுது கூறிய அருமையான கருத்துக்கள் பொதிந்த மணிமொழிகளைத் தொகுத்து வைத்தார்; மேலும், அவ்வரசன் நாட்டு நலங்கருதிச்

செய்த அறங்களைப்பற்றி ஒரு நூலும் இயற்றியுள்ளார். சோமபட்டர் என்ற புலவர், '**ஜைன் சரிதம்**' என்ற பெயரால் அந்த மன்னனது வாழ்க்கை வரலாற்றை எழுதினர். **உதயபட்டர்** என்ற மற்றொரு புலவர், சுல்தானின் வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றை வைத்து, '**ஜைன் விலாசம்**' என்னும் நாடக நூல் ஒன்று எழுதியுள்ளார். அக்காலத்திலேதான் ராஜதரங்கிணியும் மகாபாரதமும் **முல்லா அகமது அல்லாமா** என்பவரால் பாரசீக மொழியில் பெயர்க்கப்பட்டன. இவ்வாறு, எல்லாச் செல்வமும் பெருக நல்லாட்சி புரிந்தான் ஜைன்-உல்-அபிதீன்.

## வாழ்வும் தாழ்வும்

நம் நாட்டையாண்ட முகலாயப் பேரரசராகிய **அக்பர்**, காஷ்மீரத்தின் எழிலையும் வளத்தையும் கண்ணுற்று, அதனைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தினர். அப்பேரரசரே புகழ் வாய்ந்த **ஹரிபர்வதக் கோட்டை**யைக் கட்டினர். அக்பர் காஷ்மீரத்திற்குச் சில சமயம் வருகை புரிந்ததும் கூறப்படுகிறது. அக்பர் காலத்திலும், அவர்க்குப் பின் வந்த முகலாய மன்னர் காலத்திலும், காஷ்மீரின் எழில் மேலும் பெருகி விளங்கியது. நூற்றுக்கணக்கான பூம்-

பொழில்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டன. முகலாய அரசர்கள் அந்நாட்டில் தங்கி ஆட்சி புரியவில்லையாயினும், அவ்வரசர்கள் காலத்தில் நாடு இழந்த சிறப்பை மீண்டும் பெற்றுத் திகழ்ந்தது.

**ஔரங்கசீபு**வின் ஆட்சிக்குப் பிறகு காஷ்மீர் மீண்டும் கொடுந்துயருள் ஆழ்ந்தது. **பட்டாணியர்** நாட்டைக் கைப்பற்றினர். அவர்களால் காஷ்மீர் அடைந்த இன்னலுக்கு எல்லையே இல்லை. அவர்கள் முகலாய மன்னர்கள் அமைத்த அழகிய பூந்தோட்டங்களையும் அழித்தார்கள். அவர்களுக்கு முகலாய மன்னர்மேல் ஏற்பட்ட பகைமையே அவ்வழிவு வேலைக்குக் காரணமாயிற்று. இந்நிலையில் காஷ்மீரம் தன் அழகும் வளமும் குன்றி வாடியது. இயற்கையும் சீறி எழுந்தது. வெள்ளத்தாலும் அழிவு பெருகிற்று. வறுமையே அறியாத அந்த நாட்டிலும் வறுமை தலை காட்டியது.

இவ்வாறு தன் அழகழிந்து, உருக்குலைந்து, வளம் குறைந்து, வாழ்விழந்த சமயத்தில் '**பஞ்சாபு சிங்கம்**' எனப் புகழ்பெற்ற **இரஞ்சித் சிங்கு** என்னும் சீக்கிய மன்னர், அந்நாட்டைக் கைப்பற்றினர். ஆனால், அவரது ஆட்சியிலும் காஷ்மீரத்தின் தொல்லைகள் குறையவில்லை. சீக்கிய வீரர்கள் அந்நாட்டு

மக்களை அடக்கி ஆண்டார்கள். வரிச்சுமை தாங்க முடியாததாயிற்று. தொழில்கள் சிதைந்தன. மக்கள் தாங்கள்படும் வேதனைகளை வெளியிட்டுச் சொல்ல வழியின்றி வாடினார்கள்; தங்களுக்கு நல்ல காலம் என்று வருமோ என்று ஏங்கினார்கள். இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக, இரவும் பகலும் மாறி மாறி வருதல்போல, காஷ்மீர வளநாட்டிற்கு வாழ்வும் தாழ்வும் மாறி மாறி வந்தன.

## 2. பழங்கோயில்கள்

### மக்கட்பண்பும் கோயில்களும்

தோன்றுவனவெல்லாம் வளரும்; வளர்வனவெல்லாம் வீழும். இஃது உலக இயற்கை. இவ்வியற்கை விதி தனிப்பட்டவர்க்கே அன்றி, சமுதாயத்துக்கும் பொருந்தும். மக்களுடைய அறிவாற்றல்களும் செயல் முறைகளுமே ஒரு சமுதாயத்தின் பண்புகளாய் விளங்கும். அப்பண்புகள் அச்சமுதாயத்தின் முன்னேற்றத்தைக் குறிப்பனவாகும். சமுதாயமே அழிந்தாலும், அதனிடம் வளர்ந்து சிறந்த பண்பாட்டை உலகம் என்றுமே நினைவுகூரும். கட்டுப்பாட்டுடன் ஒன்றி வாழும் மக்கள் தொகுதியே, '**சமுதாயம்**' எனப்படும்.

சமுதாயப் பண்பாடு விளங்கவும், ஒற்றுமை நிலவவும், கலையறிவு ஓங்கவும் மக்கள் அமைத்துக்கொண்ட பொதுவிடங்களே கோயில்களாய் விளங்கின. அக்கோயில்கள் காலத்தாலும், இயற்கையின் மாறுதல்களாலும், பகைவர் படையெடுப்புக்களாலும் மற்றும்

பல காரணங்களாலும் உருக்குலைந்த போதிலும், அவை சமுதாயம் அடைந்த முன்னேற்றத்தை விளக்கும் சின்னங்களாய்க் காட்சியளிக்கின்றன. நம் பாரதநாடு கோயில்களுக்குப் புகழ் வாய்ந்த பழம்பெரு நாடு. அவ்வாறே காஷ்மீரமும் பல பெருங்கோயில்களாலும் சிறு கோயில்களாலும் சிறந்து விளங்கியது.

## மதங்கள்

பண்டைக் காலத்தில் காஷ்மீர மக்கள் அனைவரும் இந்துக்களாகவே இருந்தார்கள். பேரரசரான அசோகர் காலத்தில் நமது நாட்டில் **புத்தமதம்** பரவியது. அசோகரும் அம்மதத்தைத் தழுவினர்; உலகமெங்கும் புத்தமதம் பரவ வேண்டுமெனக் கருதினர்; பல நாடுகட்கும் புத்தமதத் துறவிகளை அனுப்பினர். அவரது முயற்சியால், திபேத்து, சீனு, ஜப்பான், பர்மா, சயாம், இலங்கை முதலிய பல நாடுகளில் புத்த மதம் பரவியது. காஷ்மீரத்திலும் புத்தமதக் கொள்கைகள் பரவின. அதன்பொருட்டு அசோகரே காஷ்மீருக்கு வருகை புரிந்தாரெனக் கூறுவர். பின்னர் முகம்மதியர் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய மதம் வேரூன்றி, முன்னிருந்த இரண்டையும் வீழ்த்தியது. காஷ்மீரம் இவ்வாறு மூன்று பெரிய மதங்-

களைச் சார்ந்த மக்கள் வாழ்வதற்கு இடமளித்து நின்றதால், அம்முச்சமயத்தினர்க்கும் உரிய கோயில்களும் அங்கு எழுந்து விளங்குவனவாயின.

## பழங்கோயில்களின் தோற்றம்

காஷ்மீரத்துக் கோயில்கள் அழிவுற்றுக் கிடக்கும் நிலையிலும் கட்டடக் கலைப் பெருமையினை விளக்கி நிற்கின்றன. அவை தம்மை அமைத்த அரசர்களின் புகழ்த் தூண்களாய் விளங்குகின்றன. அக்கோயில்களின் உறுதியான சுவர்களும், வளைவுகளும், அவற்றிற்காணப்படும் சிதைந்த சிற்பங்களும், உடைந்த தூண்களும் வியத்தகு காட்சியளித்து நிற்கின்றன. அவற்றைப் பார்க்கும் பொழுது அக்கட்டடக் கலைஞரும் சிற்பக் கலைஞரும் மாயம் வல்ல மந்திரம் கற்றவராகக் காட்சியளிப்பர். சிற்பிகள் கை பட்டால் கருங்கல்லும் களிமண்ணுய்க் குழைந்து கொடுக்கும். அவர்கள் எழுப்பிய கற்சுவர்களிலும் தூண்களிலும் அமைந்த சிற்பச் சிலையுருவங்கள் உயிர் பெற்று விளங்குவன போலத் திகழும். அந்தோ! அக்காட்சிகள் மறைந்துவிட்டன!

## தாக்தி சுலைமான்

காஷ்மீரத்துக் கோயில்கள் பெரும்பாலும் கிரேக்க நாட்டுச் சிற்பிகளாலும் நம் நாட்டுக் கலைஞர்களாலும் கட்டப்பட்டவை. அழிந்து கிடக்கும் கோயில்களில் மிகச் சிறந்த காட்சியளிப்பது **தாக்தி சுலைமான்** என்னும் தூபியாகும். அது ஸ்ரீநகரை அடுத்துள்ள மலைச்சாரலில் அமைந்துள்ளது. ஸ்ரீநகர் செல்பவர் அதனைப் பாராது மீள்வதில்லை. அத்தூபியை அடைதற்கு வளைந்து வளைந்து செல்லும் கற்படிகள் அமைந்துள்ளன. ஆயிரம் அடி உயரத்தில் ஓர் அகன்ற மேடையில் அத்தூபி கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அம்மேடையிலிருந்து காண்போமாயின், காஷ்மீரத்தின் கவின் மிக்க காட்சிகள் கண்ணுக்குப் பெருவிருந்தாகத் திகழும். அதன் அருகிலேயே அசோக மன்னரின் மகன் கட்டியதாகக் கூறப்படும் பழங்கோயில் ஒன்றுண்டு. அக்கோயிலில் இப்பொழுது எஞ்சியுள்ள பகுதிகள் மிகச் சிலவே. அச்சில பகுதிகளே காஷ்மீரத்தின் பழம்பெருமைக்குத் தகுந்த சின்னங்களாய்க் காட்சியளிக்கின்றன.

## மார்த்தாண்டர் கோயில்

பேரரசர் அசோகர் மகன் ஆட்சி புரிந்த காலத்திலேயே லிடார்ப் பள்ளத்தாக்கில், **பாம்ஜோ** என்னுமிடத்தில், ஒரு பெருங்கோயில் கட்டப்பட்டது. அதனைக் கட்டியவர் இன்னார் என்பது தெரியவில்லை. அதுவும் சிதைந்தே கிடக்கின்றது.

ஸ்ரீநகருக்கு இருபத்துநான்கு கல் தொலைவிலுள்ள **இஸ்லாம் பாது** என்னும் ஊருக்கருகிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல கோயில்கள் இடிந்து காணப்படுகின்றன. லிடார்ப் பள்ளத்தாக்கிலமைந்த எல்லாக் கோயில்களிலும் மிகச் சிறந்த நிலையில் இன்றும் நின்று நிலவுவது **மார்த்தாண்டர் கோயில்** எனப்படுவது. அக்கோயில் அமைந்துள்ள இடம் மிகவும் வனப்பு வாய்ந்தது; அழகான பசும்புற்சரிவில் வானுறவோங்கிய மரங்களும் குளிர்ந்த நீரூற்றுக்களும் நிறைந்த தாழ்வரையின் முதலில் அமைந்துள்ளது. அதன் பின் புறத்தே விளங்கும் வெண்பனி போர்த்த மலைகள் கண்கொள்ளாக் காட்சியளிப்பனவாம். கோயிலின் முன் மண்டபங்களும், சுற்றுப்புறங்களும், வழிபாட்டுக் கூடங்களும், கருவறைகளும் இப்பொழுது இடிந்து கிடக்கின்றன. கோயிலின் உயரம் எழுபதடிக்கு

மேல் இருக்கும். அகலமான கற்படிகள் கோபுர வளைவு வரை செல்கின்றன. அதன் இரு மருங்கிலும் மிகப் பெரிய வளைவுகளையுடைய கூடங்கள் அமைந்துள்ளன. அக்கோயிலின் ஒரு புறத்தே இருநூற்றிருபதடி நீளமும் நூற்று நாற்பதடி அகலமும் கொண்ட பெருங்கூடம் ஒன்றிருக்கின்றது. அக்கூடத்தில் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட எண்பத்து நான்கு தூண்கள் நிற்கின்றன. மேற்கூரையாய் அமைந்த கட்டடம் இப்பொழுது வீழ்ந்துவிட்டது. அக்கோயிலைக் கட்டியவன் லலிதாதித்தன் என்பவன். அதன் சில பகுதிகளை அவனுக்கு முன் ஆட்சி புரிந்த ராமாதித்தன் மனைவியார் கட்டினரெனவும், எஞ்சிய பகுதிகளையே லலிதாதித்தன் கட்டி முடித்தானெனவும் கூறுவர்.

## நாக வணக்கம்

காஷ்மீர்ப் பொது மக்களிடையே சாதுக்களையும், சித்தர்களையும், முனிவர்களையும் வழிபடும் வழக்கம் உண்டு. சித்தர்களைப்பற்றிய பாடல்களைப் பொது மக்கள் மனமுருகிப் பாடுவார்கள். ஆறுகளிலும் ஏரிகளிலும் படகோட்டுபவர்களும் இத்தகைய பாடல்களைப் பாடுவதை இன்றும் கேட்கலாம். அன்றியும், நாக வணக்கமும் அந்நாட்டிற் பழமையாகக் காணப்-

படுகின்றது. நாக வணக்கம் என்பது உலகிற்கே மிகப் பழமையானது. உலகின் பல பகுதிகளி-லும் கதிரவன் வழிபாடு நிகழ்ந்தது போலவே, நாக வணக்கமும் நிகழ்ந்து வந்திருக்கின்றது. நமது நாட்டிலும் நாக வணக்கம் அத்தகையதே. அரசமரத்தடியில் விநாயக வணக்கத்துடன் நாக வழிபாடும் சேர்ந்து நிகழ்த்தப்படுவதை நம் நாட்-டில் இன்றும் காணலாம். அவ்வாறே, காஷ்மீரத்தி-லும் ஒரு காலத்தில் நாக வணக்கம் பெருகி-யிருந்தது. காஷ்மீரத்தில் பல பகுதிகள் அப்-பெயருடன் தொடர்பு படுத்தி வழங்கப்படுகின்-றன. அந்நாட்டு மக்கள் ஒவ்வொரு மலையிலும்—சிறப்பாக நீரூற்றுள்ள இடத்தில்—பெரும்பாம்பு-கள் வாழ்வதாகக் கருதினர்கள். அவற்றிற்கு அஞ்சிய மக்கள், அவற்றை வாழ்த்தி மகிழ்-விக்கக் கருதி, வழிபாடு புரிந்தார்கள். அவை விளையாடி மகிழ்வதற்கெனக் குளங்களையும் தோண்டி வைத்தார்கள். நாளடைவில் அவ்-வணக்கம் வழக்கமாகிவிட்டது.

### புத்த விஹாரம்—கும்பா

அசோக மன்னரால் புத்தமதம் அங்குப் பரவியதிலிருந்து புத்தமதக் கோயில்கள் பலவும் கட்டப்பட்டன. அவற்றிலும் பல இடிந்து பாழடைந்து கிடக்கின்றன. இப்பொழுது சிறந்து

விளங்குவது ‘ கும்பா ’ என்னும் அழகிய புத்த விஹாரம். அஃது உயரமான இடத்தில் அமைந்-துள்ளது. அதன் தாழ்வாரச் சுவர்களிலும் பிற இடங்களிலும் நம் நாட்டில் அஜந்தா, சித்-தன்ன வாசல் முதலிய இடங்களிற் காணப்படு-வதே போல, விலங்குகள், பறவைகள், செடி கொடிகள், பூக்கள், மனிதர்கள், தேவர்கள், பூதங்கள் ஆகிய இவற்றின் உருவங்கள் ஓவியங்-களாக வரையப்பட்டிருக்கின்றன; விலங்கு-களையும் பறவைகளையும் துன்புறுத்தக் கூடாது என்று அறிவுறுத்தும் ஓவியங்கள் சிலவுள்ளன; அன்பு, அருள், ஒற்றுமை முதலிய பண்புகளைப் பரப்பும் சித்திரங்களும் பல. மரத்தின்மேல் உள்ள ஒரு பறவை, யானையின் முதுகின்மேல் அமர்ந்துள்ள ஒரு முயலிடம் பழத்தைப் பறித்து நீட்ட, முயல் அதை வாங்கிக் கீழே நிற்கும் ஒரு மனிதனிடம் கொடுப்பது போல ஒரு சித்திரம் வரையப்பட்டுள்ளது. விலங்குகளும் பறவை-களும் மனிதர்களும் எவ்வாறு ஒத்து வாழ்ந்தார்-கள் என்பது இதனால் விளக்கப்படுகிறது.

கோயிலுக்குள் புத்தர் சிலையைத் தவிர வேறு சில தேவர்களின் சிலைகளும் காணப்படுகின்றன. அருட்கடவுளாகிய **சம்பா,** கையை மூடிக்-கொண்டு அமர்ந்திருக்கிறது. கோயிலுக்குள்ளே ‘ **தானிக்கு** ’ என்ற பெயருள்ள பட்டுக் கொடி-

களால் அழகு படுத்தியுள்ளனர். அண்மையில் டில்லி மாநகரில் நடைபெற்ற ஆசிய மாநாட்டில் அக்கொடிகள் காட்டப்பட்டன. புத்தமதத் துறவிகள் இடைவிடாது உருவேற்றும் மந்திரம் '**ஓம் மணி பத்மே ஓம்**' என்பது. இம்மந்திரத்தைச் சுவர்களிலும், கொடிகளிலும், மற்றும் பல இடங்களிலும் காணலாம். இவை போன்ற கோயில்களேயன்றி, சதுரமாயமைந்த பீடங்களும் சமாதிகளும் பலவுண்டு.

## இக்காலக் கோயில்கள்

இப்பொழுது கோயில்கள் பெரும்பாலும் மரத்தாலும் களிமண்ணாலும் கட்டப்பட்டுள்ளன. ஸ்ரீநகரிலுள்ள மிகச் சிறந்த மசூதி, மரத்தால் கட்டப்பட்டதே. மரத்தால் இயன்ற தூண்களிலும் காஷ்மீர மக்கள் தங்களுக்கியல்பான கலையுணர்ச்சியைக் கைவிடாது சித்திர வேலைப்பாடுகள் செய்துள்ளார்கள். கோயில்களிலும் மசூதிகளிலும் பொன்னிற விமானம் ஒன்று மிகப் பெரிதாகவும், வெள்ளி விமானங்கள் பல சிறியனவாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொன் முலாம் பூசிய விமானங்களும், வெள்ளி விமானங்களும் கதிரவன் ஒளியில் கண் கூசும் பேரொளி வீசித் திகழும்.

எளிய முறையில் அமைந்த கோயில்களும் ஆங்குண்டு. மரத்தின் அடியில் வழிபாட்டுக்குரிய சிலை வைக்கப்பட்டிருக்கும். மரக்கிளைகளும் அவற்றில் பின்னிக் கிடக்கும் கொடிகளுமே அதன் மேற்கூரையாகும். சிலைக்கெதிரில் ஒரு மரத்தூணிலோ கற்றூணிலோ பித்தளையாலும் வெண்கலத்தாலும் இயன்ற மணிகள் பல தொங்கும். வழிபாடு புரிபவர் அவற்றை அசைத்து ஒலியெழுப்புவர்.

# 3. மலை வளம்

## நங்க பர்வதம்

காஷ்மீரப் பள்ளத்தாக்கு நாற்புறமும் வானளாவிய மலைத் தொடர்களால் சூழப்பட்டுள்ளது. அப்பள்ளத்தாக்கு, கடல் மட்டத்திலிருந்து ஐயாயிரம் அடிகட்குமேல் உயரத்திலுள்ளது. அந்நாடு இமயமால்வரைச் சூழலிடையுள்ளது என்பதை முன்னரே கூறினோம். அப்பெருமலைத்தொடர் வடமேற்கில் **இந்து குஷ்** மலைத்தொடர்களிலிருந்து சற்றுத் தென்கிழக்காக **டார்ஜிலிங்கு** மலைத்தொடர்கள் வரைக்கும் அப்பால் நீண்டு பரந்து கிடக்கின்றது. டார்ஜிலிங்குக்கு அருகிலேயே இமயத்தின் மணி முடியெனத் திகழும் '**எவரெஷ்டு**' என்னும் இணையற்ற கொடுமுடியுள்ளது. இனி, காஷ்மீரத்தைச் சூழ்ந்துள்ள மலைகளைக் காண்போம் :

**நங்க பர்வதம்** என்பது, பேரழகு வாய்ந்த பெருமலை. அது ஏறக்குறைய 27000 அடி உயரமுள்ளது ; வெண்பனி போர்த்து விளங்கும் நான்கு சிகரங்களையுடையது. அஃது இமயத்-

தின் ஒரு கோடியாய் அமைந்துள்ளது; இமயப் பேரரசனுடைய தோள்களைப்போல விளங்கும் தோற்றமும் வனப்பும் மிக்கது. நங்க பர்வதக் காட்சியின் பேரழகு, அதில் ஏறிப் பார்த்தவர்களுக்கே விளங்கும். ஒரு முறை பார்த்தவர், அதன் அழகை என்றும் மறவார். அங்குச் செல்ல விரும்புபவர், சிறிது தூரம் காஷ்மீரத்துக் குதிரைகளிலும், நெடுந்தூரம் காலால் நடந்தும் செல்ல வேண்டும். அவ்வாறு செல்பவர் 'லோலாபு' என்னும் அழகிய கணவாயை அடைவர். அதன்மேல் மரமடர்ந்த காடுகளின் ஊடே மலைமீது ஏற வேண்டும். வழியெல்லாம் மனிதர்களைக் கண்டதும் கீச்சிட்டோடும் 'குரங்குகள்' மனிதர் வருகையை விரும்பாதவை போல விரைந்தோடிச் சென்று, மரங்களில் ஏறிக் கிளைக்குக்கிளை கடுவிசையுடன் தாவிச் செல்லும். சில குரங்குகள், மிக்க உயரத்திலுள்ள கிளைகளில் தொங்கிக்கொண்டு, வழிச் செல்பவரை உற்று நோக்கி ஒலி செய்யும். சில வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும். இக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சென்றால், கோதுமை வயல்களைக் காணலாம். அங்கு நின்று நோக்கினல், நங்க பர்வதத்தின் முழுத் தோற்றமும் பேரழகுடன் விளங்கும். சேய்மையில் அதன் சிகரங்கள் நான்கும் வெண்படாம்

போர்த்து விளங்கும் காட்சியின் பேரெழிலைச் சொல்லால் அளவிட்டுரைத்தல் இயலாது.

பச்சைப்பசேலென விளங்கும் புல் வெளி-களும், தோட்டங்களும், தாழ்வரையில் வானுற-வோங்கிய மரங்களும், எல்லையின்றி உயர்ந்து செல்லும் மலைத்தொடர்களும், இடையிடையே நீரூற்றுக்களும், அருவிகளும், பசுஞ்சோலை-களும், எல்லாவற்றையும் ஆட்கொண்டு அருள் செய்து வெள்ளிமால்வரைபோல விளங்கும் பனி-மூடிய பெருமலைத் தோற்றமும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். நங்க பர்வதத்தின் அழகை முழுதும் காண விரும்பி அதன்மீது ஏற முயன்ற மலையேறிகளிற்பலர், அதனையே தமது முடி-விடமாகக் கொண்டு மறைந்தே போயினர். அவர் முடிவைக் கண்டு கலங்காத வீரர் சிலர், இடை விடாது முயன்று, இறுதியில் வெற்றி பெற்றனர். இவற்றையன்றி, இருபத்து நாலா-யிரம் அடி உயரம் உள்ள '**நூன்கூன்**' என்னும் இணைச் சிகரங்களும், அதே உயர-முடைய **நூபுரா** என்ற சிகரமும், மற்றும் பல சிகரங்களும் காஷ்மீரின் மறுகோடியில் இருப்-பார்க்கும் புலனாகும்.

## ஹரமுக பர்வதம்

**ஹரமுக பர்வதம்** என்பது காஷ்மீரிலுள்ள மற்றோர் அழகான பனிமலை. அது பதினாறு-யிரம் அடி உயரமுள்ளது. அம்மலையிலும் நான்கு சிகரங்கள் உள்ளன. அம்மலை தனக்-கெதிரே பெருகியோடும் அமைதியான நீரில் பிரதிபலித்துத் தோன்றும் காட்சி, பார்ப்பதற்கு மகிழ்வூட்டி நிற்கும். அம்மலையில் பனிப்பாறை-கள் பல செங்குத்தாய் உயர்ந்தும் மிகத் தாழ்ந்தும் விளங்கும். மலையேறிகளுக்குச் சறுக்குப் பாறை-கள் உவகையூட்டும் விளையாட்டு இடமாய்த் தோன்றும். சிலர் உயரத்தில் மிக முயன்று ஏறி வழுக்கி வீழ்ந்து விளையாடுவதும் உண்டு. இதற்காகவே அங்குச் செல்பவர் பலர்.

## கொலாஹை

**கொலாஹை** என்பது, மற்றொரு புறத்-துள்ள பெரிய மலை. அதன் தோற்றம் பிறவற்-றினும் மாறுபட்டது. ஊசி போன்று விளங்கும் சிகரமும், பார்ப்பதற்கே அச்சமூட்டும் இருண்ட பள்ளங்களும் அங்குண்டு. லிடார்க் கணவாயி-லிருந்து அதற்குப் போவதற்குப் பாதையொன்-றுண்டு. அப்பாதை பழமரங்கள் அடர்ந்த காடு-கள், பசும்புல் வெளிகள் இவற்றினூடே செல்வ-

தால், எங்கு நோக்கினும் இயற்கையெழில் விளங்கித் தோன்றும்.

## பீர்பங்கலும் பிற மலைகளும்

பீர்பங்கல் என்னும் மலைத் தொடரிலுள்ள தட்டாகுட்டி என்னும் சிகரம், பதினாறாயிரம் அடி உயரமுள்ளது. குல்மர்கு என்னும் அழகான பசும்புல் வெளியை அடுத்து உயர்ந்து விளங்குவது 'அபர்வாட்டு' என்னும் குன்றம். 'காஜி நாகம்' என்னும் மலைத்தொடர், ஒரே நிலையில் நீண்டு, மற்றொரு புறம் தோன்றும். நீல மணி போன்று விளங்கும் அதன் பாறைகள் பளபளப்புடன் கண்ணாடிபோல ஒளி வீசித் திகழும். அஃது அமைதியான ஆற்று நீரிலும் ஏரிகளிலும் நீரூற்றுக்களிலும் சிறு குளங்களிலும் பேரொளியுடன் தன் உருக்காட்டி விளங்கும். இத்தலை சிறந்த மலைகளைத் தவிர, எண்ணற்ற மலைகள் இன்னும் பல தொடர்ந்து சூழ்ந்துள்ளன. அவற்றுட்பல, இன்னும் யாராலும் ஏறிப் பார்க்கப்படவில்லை; பலவற்றிற்குப் பெயர்களும் வழங்கப்படவில்லை. அவை பதினாறாயிரம் அடிகட்கு மேலும் உயர்ந்து விளங்குவன. அவை ஐரோப்பாவிலுள்ள 'ஆல்ப்ஸ்' என்னும் மலையின் மிக உயர்ந்த சிகரத்தினும், உயரமுடையனவாயின், அவற்றையெல்லாம் தன் சிறு பகுதிகளாகக்

கொண்ட இமய மால் வரையின் பெருமைதான் என்னே! அவையன்றிக் காஷ்மீரப் பள்ளத்தாக்கிற்குப் புறத்தேயுள்ளனவும் இன்றைய காஷ்மீர் நாட்டெல்லைக்கு உட்பட்டனவுமாகிய காரகோரம், முஷ்டாக்கு என்னும் மலைத்தொடரும் அந்நாட்டைச் சேர்ந்தவைகளே. இன்னும் பூஞ்சு, கிஷ்டிவார் முதலிய பகுதிகளிலும் மலைகள் பலவுண்டு. இவ்வாறு காஷ்மீரம் மலையடர்ந்த நாடாகவே விளங்குகின்றது.

## இயற்கைச் செல்வம்

மலைகளே காஷ்மீரத்தின் புகழ்ச் செல்வத்தை அழியவிடாது பாதுகாக்கும் அரண்கள். அவை, இடையருத நீர் வளம் சுரந்து, காஷ்மீரத்தை எழிற்பூஞ்சோலையாக்கி நிற்கின்றன. அவை அழகுக் கோயில்களாய் விளங்குவதுடன், வளம் பெருக்கி வாழ்வளிக்கும் அருட்கோயில்களாயும் அமைந்துள்ளன. அடுத்தடுத்து வந்த அரசியற்புரட்சிகளாலும் இயற்கையன்னையின் சீற்றங்களாலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எண்ணற்ற துன்பங்களை அடைந்தும், தன் உருக்குலையாமலும் எழில் மாருமலும் காஷ்மீரம் விளங்குவதற்குப் பெருங்காரணம் அம்மலைகளே. அவை துன்பம் துடைக்கும் அமுத சஞ்சீவியாகவும் திகழ்கின்றன. இன்னறுங்-

கனிச் சோலேகளும், நன்மணம் வீசும் பூம்பொழில்களும், பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற பசும்புல் வெளிகளும், ஆறுகளும், ஏரிகளும், நீரூற்றுக்களும், வளம் நிரம்பிய வயல் வெளிகளும் அம்மலேகள் தந்த நல்வரங்களேயாகும்.

## புல் வெளிகள்—நாகமர்கு

இனி, மலேகளேயடுத்துஅழகிய காட்சி நல்கும் பசும்புல் வெளிகளேப் பார்ப்போம்: அப்புல் வெளிகள் பெரும்பாலும் மலேச் சரிவுகளுள் ஒரு பகுதியாகவே விளங்கும். அவற்றைக் காஷ்மீர மக்கள் **மர்கு** என்று வழங்குவார்கள். அத்தகைய மலேச் சரிவுகளுள் மிகவும் அழகு வாய்ந்தது '**நாகமர்கு**' எனப்படுவது. அது **ஆல்ஸு** என்னும் சிற்றூருக்குச் சற்றுயரமான இடத்தே **ஊலர் ஏரி** என்னும் பெரிய ஏரிக்கு முன்புறத்தே அமைந்துள்ளது; அவ்வேரிக்கு மேல் 3500 அடி உயரத்தில் விளங்குவது. ஆப்ஸு என்னும் ஏரியிலிருந்து செல்வது, மலே மிகவும் செங்குத்தாய் உயர்ந்து தோன்றுதலால், அத்துணே எளிதன்று. பசும்புல் அடர்ந்த அதன் தோற்றம் மிகவும் உளம் கவர் வனப்புடையதாய் விளங்கும். அதன் கண் கவர் வனப்பு, அதனிடை வரிசை வரிசையாய்ப் பொன்னொளிர்

கனிகள் குலுங்க நிற்கும் அன்னாசி முதலிய பழமரங்களால் மிகுந்து தோன்றும். அப்புல் வெளியின் உயரமான இடத்திலிருந்து நோக்-கினால், நங்க பர்வதத்தின் சிகரங்களில் சில காட்சியளிக்கும். எதிர்ப்புறத்தே மரங்கள் அடர்ந்த ஹரமுகபர்வதம் தோன்றும். அம்மலை-யில் வெண்பொன் உருகியோடி வருவதுபோல வளைந்து வளைந்து பெருகி வரும் ஆற்று நீர்த்-தோற்றம் வியத்தகு காட்சியளித்துச் சிந்தை-யிற் சிறந்த கற்பனைகளைத் தூண்டிவிடும். சேய்மையில் வான வளையத்தையொட்டிப் பள-பளப்பாகப் பொன்னொளி வீசும் **காஜி நாகம்**' என்னும் மலைத் தொடரும், '**காகன்**' என்னும் மலையும் காட்சியளிக்கும். அவற்றிற்-கும் அப்பால் **பீர்பங்கல்** மலைத் தொடரின் விளிம்பு தோன்றும். அப்புல் வெளியில் மனிதர் தங்குவதற்குக் குடிசைகள் அமைக்கப்படவில்லை. அம்மலைச் சரிவு ஆடு மாடுகளும் குதிரைகளும் மேய்வதற்கேற்ற இடமாய் விளங்கும்.

## குல்மர்கு

**சோனமர்கு** என்பது மற்றொரு புல்வெளி. அங்கே பழமரங்களும் நீர்நிலைகளும் நிறைந்து விளங்குவதால், மக்கள் அங்குத் தங்கி உல்லாச-மாய் விருந்துண்டு செல்வார்கள். அங்கே மலர்ச்-

செடிகளும் அதிகமாதலால், அது பேரழகு வாய்ந்த புல் வெளியாகும். 'குல்மர்கு' என்னும் வேருெரு புல் வெளி, மக்கள் மனங்கவரும் இடமாகும். அது கடல் மட்டத்திற்கு மேல் எண்ணுயிரம் அடி உயரத்தில் உள்ளது. அப்புல் வெளியின் முக்கியமான பகுதி, இரண்டு மைல் நீளமும் அரைமைல் அகலமும் கொண்டது. அங்கே மக்கள் உல்லாசமாய்த் தங்குவதற்கெனப் பல சிற்றில்கள் அமைந்துள்ளன. விளையாட்டுப் போட்டிக்குரிய வெளியிடமும் ஆங்குண்டு. அங்கே பந்தாட்டம் முதலிய பல வகை ஆட்டங்கள் நாள் முழுதும் நிகழ்ந்துகொண்டிருக்கும். இவை மட்டுமா ? அங்கே மக்கள் பெருங்கூட்டமாய்க் கூடிப் பல நாள் தங்குவார்கள். ஆதலால், அஞ்சல் நிலையங்களும் ஆங்குண்டு. மாதா கோயில் ஒன்றும் அமைந்துள்ளது. நூல் நிலையங்களும் கடைகளும் அமைந்து விளங்குவதென்ருல், அப்புல் வெளியைக் காஷ்மீர மக்களும் பிறரும் எவ்வளவு அருமையாய்ப் போற்றிப் பயன் படுத்திஞர்கள் என்பது விளங்கும். ஆங்கமைந்துள்ள சிறு குடில் முதலியன யாவும் மரத்தால் இயன்றவைகளே. அங்குப் பெரும்பாலும் களியாட்டம் விரும்பிச் செல்பவர் ஆங்கிலேயரேயாவர்.

குல்மர்கில் களியாட்டத்திற்குரிய காலம்

ஜூன் மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையுள்ள நான்கு மாதங்களேயாம். ஆனால், மக்கள் ஏப்பிரில் மாதத்திலேயே செல்லத் தொடங்குவார்கள்; அக்டோபர் முடிய அங்குத் தங்கியிருப்பார்கள். பனிக் காலம் தொடங்கிவிட்டால், அங்கு யாரும் செல்லார். குடிசைகள் முதலிய யாவும் பனியால் மூடப்பட்டுக்கிடக்கும். மரங்களெல்லாம் உறைபனியால் போர்வை போர்த்தது போன்று விளங்கும். குல்மர்கு காஷ்மீர் அரசரின் கோடைகால நிலையமாகவும் விளங்கும். அரசரின் பரிவாரங்கள் மட்டுமன்றி, அந்த நாட்டின் பெருநிலக் கிழார்களும் அரசாங்க அலுவலாளர் பலரும் அங்குச் செல்வார்கள். அது களியாட்டங்களுக்கு உரிய இடமாதலன்றி, நோயற்ற நல்வாழ்வுக்குரிய இடமாகவும் விளங்கும். கோடை காலத்திலும் விடுமுறைக் காலங்களிலும் அவ்விடம் திருவிழா நடைபெறும் இடமாய்க் காட்சியளிக்கும். '**கிழான் மர்கு**' என்னும் மற்றொரு புல் வெளி, விரிந்தகன்ற சமவெளியைத் தன்னகத்தேயுடையது.

## அழகிய அபர்வாட்டு

அபர்வாட்டு என்னும் மலை, இயற்கை விந்தைகட்குப் பேர் போனது. புதுமை விழைபவர் அங்குச் செல்லாதிருப்பதில்லை. அங்குத் தாழ்வரைகளும் சிற்றேரிகளும் பலவுண்டு. அங்குச் செல்பவர் தாழ்வரைகளில் ஏறியும் ஏரிகளில் படகோட்டியும் மகிழ்வர். அங்கும் நங்க பர்வதத்தின் காட்சி இணையற்றது. அங்கிருந்து ஒரு புறம் நோக்கினால், சேய்மையில் ஸ்ரீநகரின் அழகிய தோற்றம் அதனைச் சூழ்ந்துள்ள பூம்பொழில்களுடனும் ஏரிகளுடனும் காட்சியளிக்கும்; ஜீல நதியின் அழகிய நீரோட்டமும் கட்புலனுக்கு விருந்தளிக்கும். மற்றொரு புறம், இனிய பொழில்களும் நெடிய வயல்களும் சூழ விளங்கும் சிற்றூர்கள் பல காணப்படும்.

## கணவாய்கள்

மத்திய ஆசியாவிலிருந்து காஷ்மீருக்குள் வருவதற்கு அதனைச் சூழவுள்ள மலைத் தொடர்களிடையே சில கணவாய்கள் உள்ளன. அவற்றுள், சில தாழ்ந்தும், மற்றும் சில உயர்ந்தும் உள்ளன. மிகத் தாழ்ந்த வழியையுடைய கணவாய், 'ஜோஜிலா' எனப்படுவதாகும். கணவாய்கள் ஆண்டு முழுதும் குளிர் மிகுந்தே

காணப்படுமாயினும், பனிக்காலத்தில் நடக்க இயலாதவாறு பனியால் மூடப்பட்டும் கிடக்கும். வேனிற்காலம் தொடங்கினுல் வழி திறக்கப்படு-மாயினும், விழிப்புடன் நடக்க வேண்டும். பனிக்கட்டிகள் உருகிப் பேரருவிகளும் சிற்-றருவிகளுமாய்ப் பெருவிசையுடன் கற்களை உருட்டிக்கொண்டோடும். வழியெல்லாம் நீர் கசிந்து வழுக்கும் நிலையில் விளங்கும். சிறிது தவறினும், உருகிய பனியுடன் சேர்ந்து கொடும்-பாதாளத்திற்போய் விழ நேரிடும். சில இடங்-களில் பனிக்கட்டிகள் அருவிகளையும் ஓடைகளை-யும் கடப்பதற்கு இயற்கையில் அமைந்த பாலம் போன்று காணப்படும். அப்பாலங்கள் கற்-களால் அமைந்தவை போன்று உறுதியுடன் விளங்கும். கணவாயைக் கடப்பவர், அத்தகைய பாலங்களில் ஏறிச் சென்றே ஆக வேண்டும். ஆனுல், எதிர்பாரா வண்ணம் அப்பனிப் பாலங்-கள் உருகிப் பனிப்பாளங்களாய் மிதந்து, அருவியுடன் ஓடுவதுண்டு. அப்பொழுது அவற்-றின்மீது நிற்பவர் நிலையினை நாம் சொல்ல வேண்டுவதே இல்லை! கணவாயின் வழியே நடந்து பழக்கமுடையவர், அதை அறிந்து தப்புவர். ஜோஜிலா என்னும் கணவாய் முற்-கூறிய சோனுமர்கு என்னும் புல்வெளியிலிருந்து மத்திய ஆசியாவிற்குச் செல்வதாகும்.

'**உமாபாலா**' என்பது, மற்றொரு கணவாய். அதன் வழியே வளைந்து வளைந்து நடுக்கும் குளிரில் செல்லும் பொழுது திடீரென்று பெருமழை பொழியும். மறு கணம் மழை நின்று கதிரவன் ஒளி வீசுவான். அக்கதிரவன் ஒளியில் நனைந்த ஆடைகளை உலர்த்த முயல்வதற்கு முன் மீண்டும் மழை பொழியும். இஃது அவ்வழியே செல்பவர்க்குத் துன்பம் விளைப்பதாயினும், வழியில் காணும் காட்சியால் விளையும் இன்பம் அதை மறக்கச் செய்துவிடும். வழியெங்கும் ஒரே மலர்க் காடாகவே காட்சி அளிக்கும். மலர்கள் பல வண்ணங்களும் பல வடிவங்களும் உடையனவாயினும், அவற்றை மலர்கள் என அந்நாட்டு மக்கள் வழங்குவார்களேயன்றி, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயரிட்டு வழங்குவதறிய மாட்டார்கள். எங்கு நோக்கினும் பூக்களின் மயம்! அவற்றுள் எத்தனை வகை! எத்தனை நிறம்! எத்தனை வகையான மணம்! எப்படிப் பெயரிடுவது! காஷ்மீரத்தைப் பூஞ்சோலை என்பது முற்றும் பொருந்தும் என்பதை அக்காட்சியைக் காண்பவரே அறிவர். அம்மக்கள் அவற்றின் பெயர்களை அறிய மாட்டார்களாயினும், அவற்றின் சிறந்த பயனை நன்கறிவார்கள். '**உதயபாலா**' என்பது மற்றொரு சிறிய கணவாய்.

**பாட்கோல், மார்கன்** என்னும் இரு கணவாய்கள் சற்று உயரமானவை. கணவாய்களில் நடந்து செல்வது எளிதன்று. வழி சில இடங்களில் குறுகியும், மற்றும் சில இடங்களில் அகன்றும் இருக்கும்; வளைந்து வளைந்து செல்லும்; ஏற்றமும் இறக்கமும் அடிக்கடி தோன்றும்; சில இடங்களில் ஒருவரே நடந்து செல்லக் கூடிய அளவில் மிகக் குறுகியிருக்கும். அக்குறுகிய இடமும் வழுக்கல் உடையதாய் இருக்கும்; ஒரு புறம் எல்லை காண முடியாது உயர்ந்து விளங்கும் செங்குத்தான பனி மூடிய பாறையும், மற்றொரு புறம் ஆழம் காண இயலாத கொடும்பள்ளமும் உடையதாய் இருக்கும். அவ்வழியில் செல்வதற்கும் விழிப்பும் மனவுறுதியும் வேண்டும். எதிரே தோன்றும் இயற்கை அழகைக் கண்டு மகிழ வேண்டுமாயின், ஓரிடத்தே நின்று பார்க்க வேண்டுமே அல்லாது, நடந்துகொண்டே பார்ப்பது கூடாது.

பாட்கோல் என்னும் கணவாய் மிகவும் உயரமானது; பனிப்பாறைகள் நிறைந்துள்ளது. மற்றொரு புகழ் வாய்ந்த கணவாய், '**தியாக பால்**' எனப்படுவது. அஃது ஊலர் ஏரியின் தலைக்கு மேல் உள்ளது. அதன் நடுப்பகுதி பன்னிரண்டாயிரம் அடி உயரமானது. இதுகாறும் கூறிய கணவாய்களையன்றிச் சிறியன-

வும் பெரியனவுமாகிய எண்ணற்ற கணவாய்-களும் ஆங்குள்ளன. அற்றுட்பல, மனிதர் நடமாட்டம் பெற்றதேயில்லை. இன்னும் பல, பழகியவர்களே வழியறிந்து செல்லக் கூடியவை.

# 4. நில வளம்

## பள்ளத்தாக்குகள்

மலைகளடர்ந்த பகுதிகளில் மலைகளுக்குப் பெருமையளிப்பதுடன், மக்கள் வாழ்விற்கு வேண்டும் வளங்களையும் வழங்குவன பள்ளத்-தாக்குகளே. இப்பள்ளத்தாக்குகளின் வழி-யாகவே, மலையருவிகள் பொங்கி வழிந்து ஆறு-களாய்ப் பெருகிப் பாய்கின்றன. மலைகளின் இயற்கை அழகை மிகுவித்துக் காட்டுவனவும் இப்பள்ளத்தாக்குகளே. எனவே, மலைகளைப் போலப் பள்ளத்தாக்குகளும் இன்றியமையாத இயற்கைச் செல்வங்களாம்.

காஷ்மீரத்திலுள்ள பள்ளத்தாக்குகள், பெரும்பாலும் அவற்றின் வழியே பாய்ந்தோடும் ஆறுகளைக் கொண்டே பெயரிடப்பட்டுள்ளன. ஜீலம் நதி பாயும் பகுதி, '**ஜீலம் பள்ளத்-தாக்கு**' எனப்படும். அது பல கிளைகளாய்ப் பிரிந்து பாயும் இடங்களில் அமைந்த சிறு பள்ளத்தாக்குகள் பலவும் அக்கிளையாறுகளின் பெயர்களாலேயே வழங்கப்படும்.

காஷ்மீரத்தின் பள்ளத்தாக்குகளைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அக்கதைகளால் அப்பள்ளத்தாக்குகள் யாவும் முன்னாளில் ஏரி-களாய் விளங்கின என்பது தெரிகிறது. அவ்-வேரிகள் நான்முகன் வழி வந்த முனிவர் ஒருவ-ரால் நீரற்ற நெடுநிலமாக்கப்பட்டன எனவும், அதன் பிறகே மக்கள் அங்குக் குடியேற்றப்பட்-டனர் எனவும் கூறப்படுகிறது. அவ்வேரிகளி-லுள்ள தண்ணீர் முழுதும் **பரமுல்லா** என்ற தாழ்ந்த இடத்தின் வழியே மலையை உடைத்து வெளியேற்றப்பட்டது எனவும் கூறப்படும். எழுத்தறிவற்ற மக்களிடையே இத்தகைய கதை-கள் நெடுங்காலமாகப் பரவியிருக்கின்றன.

## சிந்து பள்ளத்தாக்கு

காஷ்மீரப் பள்ளத்தாக்குகளில் **சிந்து, லிடார், வார்த்துவான், லோலாபு** என்பன சிறந்த பள்ளத்தாக்குகளாம். இவைகளையன்றிச் சிறிய பள்ளத்தாக்குகளும் பலவுள. சிந்துப் பள்ளத்தாக்கினூடே சிந்து நதி அறுபது கல் தொலை வரை பாய்ந்து செல்கின்றது. அது பாய்ந்தோடும் வழியெல்லாம் பார்ப்பதற்கினிய காட்சி மிக்கது. சிந்து நுரைத்துப் பெருகியும், குறுகிய இடங்களில் மிக விரைந்தும், மற்றும் பல இடங்களில் விரிந்து பரந்தும், வளைந்து

நெளிந்தும் செல்லும். இரு மருங்கினும் மலர்க்காடுகளும், அவற்றிடையே சில இடங்களில் மரக்குடில்களும் காணப்படும். அது லடாக்கு மலைத்தொடரில் வெளித்தோன்றி, ஜோஜிலாக் கணவாய் வழியே புகுந்தோடி, சோனுமர்குப் புல் வெளியருகே பாய்ந்து, வழியில் பல கிளையாறுகளைத் தன்னுள் அணைத்துக்கொண்டு செல்கின்றது. வழியில் சில இடங்களில் கூஸ்பெரி போன்ற பழமரக்காடுகளும் அடர்ந்துள்ளன. சிந்து ஆற்றங்கரையருகே காணப்படும் சிற்றூர்கள் நகரங்களைப் போன்ற ஆடம்பரத் தோற்றமேதுமின்றி அமைதியான வாழ்வைக் கொண்டு விளங்கும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 108706

## லிடார்ப் பள்ளத்தாக்கு

லிடார்ப் பள்ளத்தாக்கின் காட்சி வேறு வகையானது. ஆங்கு ஆறானது மலை வழியாக வழிந்தோடிப் புல் வெளிகளூடே மெல்லெனப் பாய்ந்து, காடுகளின் நடுவே சிறிது ஒடுகிச் சென்று, வரவர விரிந்து. ஈஷ்மாகம் என்னுமிடத்தில் மிக விரிந்து செல்கின்றது. கரைகளில் பருத்து விரிந்த கிளைகளுடன் வானுறவோங்கி வளம்பெற வளர்ந்த தான்றி மரக்காடுகள் அடர்ந்துள்ளன. அங்கு வாழ்பவர், புதியராய் வழிச்செல்பவரைக் காணின், கூடை நிறையப் பல

வகையான நிறங்களையுடைய சுவையும் மணமும் நிறைந்த பழங்களைக் கொடுத்து உபசரிப்பர்; வழிச் செல்பவர், தம்மிடமுள்ள தேயிலையும் சீனியும் சிறிதளிப்பினும், பெருமகிழ்வோடு பெற்று அவர்களை வாழ்த்திச் செல்வர். '**பாகல்காம்**' என்னும் இடம்வரை உடல் நலத்திற்கேற்ற வகையில் அமைந்துள்ளது. அதன்மேல் காண்பாரை மருளப்பண்ணும் காரிருள் கவிந்திருக்கும். '**ஆரு**' என்னும் மலை வரை அவ்வாறே உள்ளது. அதன் பிறகும் கொலாஹை மலைச் சிகரம் வரையிலும் பெருங்காடுகள் அடர்ந்துள்ளன. அப்பள்ளத்தாக்கின் முக்கியமான பகுதி, '**ஷீஷா நாகம்**' என்னும் மலை வரை நீண்டு செல்கின்றது.

## அமரநாதம்

ஷீஷா நாகத்திற்கும் அப்பால் உயரமான இடத்தில் விளங்குவது புகழ்பெற்ற **அமரநாதம்** என்னும் குகைக் கோயில். அமரநாதம் என்பது அருள் வழி நாடும் அன்பர்கள் ஆண்டுதோறும் யாத்திரை மேற்கொள்ளும் திருத்தலங்கள் சிலவற்றுள் மிகச் சிறந்தது. பாரதநாட்டின் தென்கோடியில் **இராமேசுவரம்** எவ்வாறு நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள அன்பர்கள் பெருவிருப்புடன் யாத்திரை செய்யும் தலமாய் அமைந்துள்-

ளதோ, அவ்வாறே நாட்டின் வடகோடியில் அமரநாதம் அமைந்துள்ளது. அமரநாதத்திற்குச் செல்லும் யாத்திரை, பிற தலங்கட்குச் சென்று வருதல் போன்று அத்துணை எளிதன்று. பிற இடங்களில் சிற்பக்கலையிற்சிறந்து விளங்கும் கோயில்களைக் காண்பதுபோல அமரநாதத்தில் கோயில் எதனையும் காணுதல் இயலாது. அஃது இயற்கைச் சூழலில் இயற்கையினமைந்த அகன்ற பெருங்குகையே ஆகும்.

அமரநாதம் ஸ்ரீநகருக்குத் தென்கீழ்த்திசையில் தொண்ணூறு கல் தொலைவில் கடல் மட்டத்திற்குப் பதின்மூவாயிரம் அடி உயரத்தில் மலைகளுக்கிடையே அமைந்துள்ளது. அதற்கு யாத்திரை செல்வது இன்று நேற்று ஏற்பட்டதன்று. மிகப்பழங்காலத்திலேயே அதன் பெருமை உணரப்பட்டு, வழிவழியாகப் புகழப்பட்டு வருகிறது.

## அமரநாத யாத்திரை

அக்குகைக்கு யாத்திரை செல்பவர், இறைவனது அருளின் துணைக்கொண்டே தாம் அங்குச் செல்லும் வன்மை பெறுவதாக எண்ணுவர். யாத்திரை செய்வாருள் அச்சமும் அன்பும் மிக்க அன்பர் இறைவனது ஏற்றுக் கொடியை முன்-

னுறவுயர்த்தித் தொண்ணூறு மைல்களும் நடந்தே செல்வர். அவருள்ளும் கொடியை வைத்திருப்பவர் நோன்பு கொண்டு செல்வர்; பாம்பூர், அவந்தி புரம், ராஜ விகாரம், அநந்தநாகம், மாத்தான் முதலிய ஊர்களின் வழியே சென்று பதினோராம் நாள் பாகல்காம் என்னும் இடத்தை அடைவர். முற்கூறிய ஊர்களில் ராஜவிகாரம் என்னுமிடத்தில் பழங்காலத்தில் புத்தமதப் பல்கலைக் கழகம் விளங்கியிருந்தது. மாத்தான் என்னுமிடத்திலேதான் புகழ் பெற்ற மார்த்தாண்டர் கோயிலும் புண்ணிய நீரூற்றுக்களும் உள்ளன.

பாகல்காம் வந்து சேர்ந்ததும் அன்று முழுதும் யாத்திரை வாசிகளுட்பெரும்பாலார் உண்ணு நோன்பு கொள்வர். கால் நடையாக வந்தவர்களைத் தவிர, திரளான மக்கள் மோட்டார் முதலிய ஊர்திகளில் அங்கு வந்து சேர்வர். அங்கிருந்து அமரநாதம் நான்கு நாட்பயண எல்லையில் உள்ளது. பாகல்காமிலிருந்து புறப்பட்டுவிட்டால், தங்குவதற்குக் குடிசைகளோ பிற வசதிகளோ இராவாகையால், அங்கிருந்தே அதற்கு ஏற்பாடு செய்துகொள்வர். அரசாங்கமும் அதற்கு உதவி புரியும்; உணவுப் பொருள்களும் விறகு முதலியனவும் கொடுத்துதவும். மேலும், அரசாங்கத்தார், நடந்து செல்ல இய-

லாதவர்க்குக் குதிரைகளும் பல்லக்குகளும், தங்குதற்குத் திரை வீடுகளும் பிறவும் கொடுத்து உதவி புரிவர்.

பன்னிரண்டாம் நாள் விடியற்காலையில் அங்கிருந்து கொடியுடன் யாத்திரையைத் தொடங்குவர்; லிடார்ப் பள்ளத்தாக்கின் வழியே பல நீரூற்றுக்களைக் கடந்து செல்வர். இரு புற- மும் நீண்டு உயர்ந்த பெரும்பாறைகளும் மர- மடர்ந்த காடுகளும் காட்சியளிக்கும். ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர், துறவியர் அடங்- கிய அவ்யாத்திரைக்குழு 'அமரநாதருக்கு ஜே! என்னும் பேரொலி முழக்கிக்கொண்டே மெல்ல மெல்லச் சென்று, அன்று மாலைப் பொழுதில் **சண்டன்வாரி** என்னுமிடத்தை அடையும். யாத்திரைக் குழுவினர் அன்று அங்கேயே தங்கி இரவைக் கழிப்பர். அவ்விடம் ஓர் ஊரின் அமைப்புடனேயே தோற்றமளிக்கும்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் யாத்திரைக் குழுவினர் மீண்டும் தம் மூட்டை முடிச்சுக்- களுடன் புறப்படுவர். அங்கிருந்து மேலும் உயர்ந்து செல்லும் வழி, செங்குத்தாகவும், சில இடங்களில் மிகக் குறுகலாகவும், வளைந்து வளைந்து செல்ல வேண்டுவதாகவும் இருப்பதால், குழுவினர் ஒருவர் பின் ஒருவராகவே செல்ல வேண்டும். மிகக் குறுகிய இடங்களில் குழு-

வினர் நின்று மெதுவாகச் செல்வர். ஏற்றத்திற்செல்வது மிகவும் கடினமானதல்லவா? மூச்சுத் திணற மெல்ல மெல்லச் சென்று மலையுச்சியை அடைவர். அங்கு நின்று கீழே பார்க்கும் பொழுதுதான் அந்த வழியின் செங்குத்தான தன்மை விளங்கும். அதைப் பார்ப்பவர் எங்கும் இறைவன் அருள் வலியாலன்றி அவ்வழியைக் கடத்தலரிதென்றே கருதுவர்.

அதன் மேல் அவர்கள் செல்லும் வழி வெறும்பாறைகள் நிறைந்த மலை வழியேயாகும். அங்கே பெரிய மரங்களைக் காண்பதரிது. சிறு செடிகள் சில ஆங்காங்கே காணப்படும். அச்செடிகளும் பன்னிற மலர்களைத் தாங்கி நிற்கும். அங்குப் பறவைகளைக்கூடக் காண முடியாது. அம்மலை வழியே சென்று வாப்ஜான் என்னுமிடத்தில் தங்குவர். அது 11500 அடி உயரத்திற்கு மேலுள்ளது. அங்குப் பனியதிகமாதலால், யாத்திரைக் குழுவினர் திரை வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடப்பர்; பொழுது புலர்வதற்கு முன்னமே அங்கிருந்து புறப்பட்டு, மஹாகுணு என்னுமிடத்தை அடைவர். காலைக்கதிரவன் தோற்றம் அவ்விடத்தில் கண் கொள்ளாக் காட்சியை நல்கும். கணந்தோறும் நிறங்கள் மாறித்தோன்றும் கதிரொளியால் வானில் தோன்றும் வண்ண விந்தைகள் எண்ணில்

அடங்கா. நொடிப் பொழுதில் நூறு வகையான நிறங்கள் தோன்றி மறையும்.

அங்கிருந்து செல்லும் வழி இறக்கமானதாகையால், குழுவினர் எளிதாகச் சென்று, பதினான்காம் நாள் இரவு பஞ்சதரளி என்னுமிடத்தை அடைவர். அங்கு ஐந்து நீரூற்றுக்கள் பெருகியோடுவதால், அவ்விடம் அப்பெயர் பெற்றது. அவ்விடம் வெறும்பாறை மயமாகவே இருக்கும்.

## விந்தைக் காட்சி

பதினைந்தாம் நாட்காலை—அன்றுதான் யாத்திரையின் கடைசி நாள்—அங்கு நின்றும் புறப்பட்டுப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டும், ஒலியை முழக்கிக்கொண்டும் அமரநாத்துக் குகையினை அடைவர். குகை ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் செல்லக்கூடிய அவ்வளவு அகலமானது. அதன் மேற்கூரையாய்அமைந்த பாறையிலிருந்து தண்ணீர் குகையின் பின்னுள்ள பாறையின் நடுவில் அமைந்து விளங்கும் சிவலிங்கத்தின் மீது துளித்துக்கொண்டேயிருக்கும். அக்குகையும் அதில் காட்சி நல்கும் சிவலிங்கமுமே இத்துணை அரும்பாடுகளையும் பொருட்படுத்தாது அன்பர் குழுவை ஆங்கு யாத்திரை செய்யுமாறு செய்து நிற்கின்-

றன. அச்சிவலிங்கம் பனிக்கட்டியின் தோற்ற-முடையது. அதிலுள்ள பெருவிந்தை என்ன-வெனில், ஒவ்வொரு திங்களிலும் அமாவாசைக்-கடுத்த நாள் அது காட்சி நல்கத் தொடங்கி, நிறைமதியன்று முழு வடிவுடன் விளங்கும். மறுநாளே அதன் வடிவம் சிறிது சிறிதாக மறை-யத் தொடங்கி, அமாவாசையன்று முற்றும் மறைந்துவிடும். இப்படியே எத்தனையோ நூற்றாண்டுகளாக அதே இடத்தில் அதேநிலையில் இவ்வியத்தகு நிகழ்ச்சி நிகழ்ந்து வருகிறது. இதன் காரணத்தை இன்றளவும் ஆராய்ந்து அறிந்தார் யாருமிலர்.

## அருள் வன்மை

அங்கு யாத்திரை செய்யும் அன்பர்கள், அக்குகையையும் இறைவன் திருவுருவையும் காண்பதோடு, யாத்திரை முடிவுற்றதாகக் கரு-துவதில்லை; ஆங்கே இரு புருக்கள் காட்சி-யளிக்கும் வரை காத்திருப்பார்கள். எவ்வித-மான பறவையும் வாழாத அவ்விடத்தில் அப்-புருக்கள் வாழ்வதும், அவை அவ்யாத்திரைக் குழுவினர்க்குக் காட்சியளித்து மறைந்து போவ-தும் அங்குச் செல்பவர் உள்ளத்தில் இறைவன் அருட்சிறப்பை நினைவுறுத்தி நிலைபெறச் செய்-யும். ஆங்கு இந்துக்கள் மட்டுமன்றி, புத்தர்-

களும் முகமதியர்களும் யாத்திரை செய்து, இறைவன் எழிற்கோலம் கண்டு, அன்பையும் அருளையும் பெற்று மீள்வார்கள். அறுநூறு ஆண்டுகளுக்கு முன் அந்நாட்டை ஆண்ட ஜைன்-உல்-அபிதீன் என்னும் முகமதிய அரசன் அக்குகைக்கு யாத்திரை செய்து, இறைவன் திருமுன் இந்துக்களும் முகமதியர்களும் சமமானவர்களே என்று கருதிய தன் பரந்த நோக்கத்தில் மேலும் உறுதிபெற்று மீண்டான் என்று கூறப்படுகிறது. இவ்வாறு ஆண்டுதோறும் பாரதநாட்டிலிருந்தும் காஷ்மீரத்திலும் திபேத்திலுமிருந்தும் அத்தெய்வக் கோயிலைத் தரிசிக்கப் பலர் சென்று வருகின்றனர்.

அக்குகை செங்குத்தான பாறைகளிடையே அமைந்துள்ளது. இறைவன் அருள் வலியைக் கொண்டே அங்குச் சென்று மீள்வதாக அங்குச் செல்பவர் கருதுவர். அவர்கள் அவ்வாறு கருதுவதில் தவறேதும் இல்லை. மனிதர் ஆற்றலுக்கு மீறியதாகவே அவ்விடம் அமைந்துள்ளது. மலைமேல் பையப் பைய ஏற வேண்டும். ஏற்றம் மூச்சுத் திணறச் செய்யும். உறைபனியோ, உறுப்புக்களிற் குருதியோட்டத்தைத் தடை செய்துவிடும். சிறிது தவறினும், அமரநாதம் செல்வதற்குப் பதிலாக அமர வாழ்வு பெற வேண்டுவதுதான். அங்குக் காணும் இயற்கைப்

பேரழகோ, இறைவன் எழிற்கோலத்தையும் அவன் பேராற்றலையும் நினைவூட்டும். உடனே, உடல் புதிய வலி பெற்று மேலேறிச் செல்லும். இந்நிலையில் அங்குச் செல்பவர் அஃது இறைவன் அருட்செயல் என்ற எண்ணம் கொள்வது இயல்பேயன்றோ? அந்த இடத்தில் சிந்து, லிடார் என்னும் இரு பள்ளத்தாக்குகளையும் இணைக்கும் சிறு வழி ஒன்று உண்டு. ஆனால், அஃது ஆண்டிற்பெரும்பகுதி உறைபனியால் மூடப்பட்டிருக்கும்.

## வார்த்துவான் பள்ளத்தாக்கு

வார்த்துவான் என்னும் ஆறு பாயும் பள்ளத்தாக்கு இரண்டாயிரம் அடி உயரம் உள்ளது. அந்த ஆறு சூர் மலைத் தொடர்களில் தோன்றிக் காஷ்மீரத்தின் கிழக்குப் பகுதியில் பாய்ந்தோடுகின்றது. அதன் கரைகளில் வளம் நிறைந்த வயல்களும் பூந்தோட்டங்களும் மிக்கு விளங்கும். அப்பள்ளத்தாக்குக் 'காட்சிக்கினிய கவின் மிக்க தோற்றமுடையது. அதனைக் காண்பவர் ஓவியம் வல்லவராயின், அதன் அழகை ஓவியம் தீட்டாது செல்லார். சிற்றூர்களும், காடுகள் நிறைந்த மலைச்சரிவுகளும், புல் வெளிகளும், அவற்றிற்கப்பால் வெண்முகில் மூடிய மலைகளும் பேரழகுடன் பெருமிதம் கொண்டு விளங்கும்.

## லோலாபு பள்ளத்தாக்கு

லோலாபு பள்ளத்தாக்கு அதன்கண் நிறைந்த சிற்றூர்களுக்குப் பேர் போனது. மலர்களால் மூடப்பெற்றுச் செழித்து வளர்ந்த செடிகளும், வானுற ஓங்கிய தான்றி மரங்களும் அப்பள்ளத்தாக்கில் எங்கும் காணப்படும். அங்குப் பாயும் ஆறு அகன்றும், சில இடங்களில் வளைந்து குறுகியும், அடர்ந்த காடுகளினூடே மறைந்தும் நீர்வளம் கொழித்துச் செல்கின்றது. அதற்கப்பால் ஒரு புறத்தே காஜி நாகம் கம்பீரமாகக் காட்சியளிக்கும். அப்பள்ளத்தாக்கு முழுதும் வளம் நிறைந்த வயல்களும், பழத் தோட்டங்களும், பூஞ்சோலைகளுமாகவேயுள்ளது. நீர் வளத்திற்கோ குறைவில்லை. கதிரவன் கொடுமை அங்குக் காணப்படுவதே இல்லை. அது பொன் கொழிக்கும் மண்வளம் மிக்கது; வேளாண்மைக்கு மிகவும் ஏற்றது ; எளிய முயற்சியில் பெரும்பயன் தரும் எழிலுடையது. அங்குத் தரையைச் சிறிது கீறி இட்ட விதையும் வீண் போவதில்லை. அங்கே ஆடு மாடுகளும் அதிகம். அங்குள்ள மக்கள் ஆட்டு மயிரால் அழகிய கம்பளங்களை நெய்து அணிவார்கள். அப்பள்ளத்தாக்கின் ஒரு கோடி பரமுல்லா வரை உள்ளது. அங்கே ஹரமுகபர்வதம் காட்சியளிக்கும்.

## மரங்களும் மலர்களும்

காஷ்மீரத்தில் மலைச் சரிவுகளிலும் காடுகளிலும் வளர்ந்தோங்கும் மரச் செல்வமும் செழித்துள்ளது. பருத்தடர்ந்த கிளைகளுடனும் விரிந்த இலைகளுடனும் ஓங்கி வளர்ந்த ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு சோலையாகக் காட்சியளிக்கும். தேவதாரு என்னும் மரம், கடல் மட்டத்திற்கு நாலாயிரம் அடி முதல் ஒன்பதினாயிரம் அடி வரையுள்ள உயரமான மேட்டுப்பகுதிகளில் காட்சியளிக்கும். சினூர் என்னும் ஒரு வகை மரம், காண்பார் மனத்தை விட்டு என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் தோற்றமுடையது. தான்றி மரங்கள் அடர்ந்து உயர்ந்து வளரும். இன்னும் கணக்கற்ற மரவகைகளும் அங்குக் காணப்படும். பைன் என்னும் மரத்தில் பல வகையுள்ளன. அம்மரங்களின் நறுமணம் நெடுந்தூரத்தில் உள்ளவர்களையும் அவற்றின்பால் ஈர்த்துச் செல்லும். உயரமான பள்ளத்தாக்குகளில் மரங்கள் பரந்து கிடக்கும் தோற்றம், பேரழகு நல்கும். ஆனால், தாழ்வரைகளில் அடர்ந்த காடுகள் அங்குச் செல்பவரை மயங்கச் செய்யும். மரங்களின் நீண்டு பருத்த கிளைகள் இலையடர்ந்து விளங்குவது, பெருமாளிகைகளில் பருத்த உத்திரங்களையும்

உயர்ந்து விளங்கும் மாடங்களையும் நினைவூட்டும்.

காடுகளைக் கடந்துவந்தால், வண்ணங்களின் விந்தைகளைப் பூஞ்சோலைகளில் பூத்துக் குலுங்கும் பூக்களில் காணலாம். ஏரிகளில் விரிந்து தோன்றும் வண்ணத்தாமரைகளும், புல் வெளிகளில் செழித்து மலரும் குங்குமப் பூக்களும், மற்றும் பல வகை மலர்களும் ஒரு மலர்க்காடெனக் காட்சியளிக்கும். காட்டுப்பூக்களும் அங்குப் பயிர் செய்வாரின்றி மிகுதியாக வளரும். அவற்றிலேதான் எத்தனை வகை! எத்தனை வண்ணங்கள்! ஒரு நாள் மாலையில் நாம் உலவி வரும் நேரத்திற்குள் நூற்றுக்கணக்கான மலர் வகைகளைக் காண்போம். வார்த்துவான் பள்ளத்தாக்கில் நீலநிறப் பூக்கள் மிகுதியாகக் காணப்படும். அப்பூக்களைப் **பாப்பி** என்று வழங்குவர்.

## விலங்குகளும் பறவைகளும்

அந்நாட்டில் காணப்படும் விலங்கு வகைகளும் பல. **மர்மாட்டு** என்பது ஒரு சிறு விலங்கு. அதன் கூவிளிக் குரல் நெடுந்தூரம் கேட்கும். அதன் உடம்பு முழுதும் சிறிது செம்மை கலந்த மயிர் அடர்ந்து தொங்கும். அது பெரும்பாலும் மலைப்பாறைகளிடையே வாழும். அது பாறைகளில் வலிய பின்னங்-

கால்களில் உட்கார்ந்திருப்பது பார்ப்பதற்கு அழகாயிருக்கும். மனிதர் வரும் ஓசை கேட்ட மறு கணம் அது பாறைகளுக்கு இடையில் மறைந்துவிடும். வேட்டையாடும் நாய்கள்கூட அவற்றைப் பிடிப்பதரிது. 'ஐபெக்ஸ்' என்னும் மற்றொரு விலங்கு நீண்ட கொம்புகளையுடையது. அது செங்குத்தான பாறைகளிடையே வாழும். மார்க்கார் என்னும் மலையாடும் அத்தகையதே. அது நீண்ட கொம்புகளுடனும் அடர்ந்து நீண்டு தொங்கும் தாடியுடனும் விளங்கும். பீர்பங்கல், காஜி நாகம் என்னும் மலைப்பகுதிகளில் மற்றொரு வகையான மலையாடு காணப்படுகிறது. வெள்ளைச் சிறுத்தைகளும், கருநிறக் கரடிகளும் அங்குக் காணப்படுகின்றன. கரடிகளுக்குத் தான்றிக் காய்களிலும் சோளத்திலும் பற்று மிகுதி. அவை முற்றிய சமயங்களில் கரடிகள் கீழிறங்கி வந்து, அப்பயிர்களை அழிக்கும். அப்பயிர்களுக்குரியார் அவற்றை வெருட்டியோட்ட முயன்று, பெருந்துன்பமடைவதும் உண்டு. பலருடைய உடம்பில் அவற்றால் விளைந்த காயங்களைக் காணலாம். ஓநாய்களும், நரிகளும், நாய்களுங்கூட மலைப்புறங்களில் வாழ்கின்றன. காடுகளில் பாராசிங்கு என்ற மிகச் சிறந்த தோற்றமுடைய செந்நிற மான்களும் வாழ்கின்றன. குரங்குகளின் கூட்டத்திற்கும் குறை-

வில்லை. மரக்கிளைகளே அவற்றின் வாழ்விடம். சில சமயங்களில் அவை தரையில் உலவுதலும் உண்டு. மனிதரையோ நாய்களையோ கண்டு-விட்டால், அவை பாய்ந்தோடி மரங்களில் ஏறிக்-கொள்ளும். **கஸ்தூரி மான்** என்னும் அழகான விலங்கும் அங்குக் காணப்படுகிறது.

அந்நாட்டில் காணப்படும் பறவை இனங்-களும் பல. கழுகுகளும், பருந்துகளும், நீர்ப் பறவைகளும், வானம்பாடிகளும், குயில்களும், பன்னிறங்களுடன் காட்சியளிக்கும் புறுக்களும், வாத்து வகைகளும், வேட்டையாடும் பறவை-களும் ஆங்குள்ளன. பேருருவம் கொண்ட பறவையினங்களும் சிலவுள. இசை பாடும் பறவைகளும் பல உண்டு. பேருருக் கொண்ட கழுகுகள், சிறகுகளை அகல விரித்து, ஆடாமல் அசையாமல் காற்றில் மிதப்பவை போலக் கம்பீரமாக மலைச்சிகரங்களின் அருகே பறந்து செல்வது விமானம் பறப்பது போலத் தோன்றும்.

## 5. நீர் வளம்

### ஜீலம் நதி

காஷ்மீர நாட்டில் நீர் வளம் கொழிக்கும் ஆறுகளும், ஏரிகளும், நீரூற்றுக்களும் பல உள. அவற்றுள் காஷ்மீரத்துக்கு உயிர் நாடியாய் விளங்குவது ஜீலம் என்னும் நதி. அஃது அந்த நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெருகியோடி, அமைதியாகத் தன் பணியை ஆற்றி வருகிறது; நாட்டில் எத்தனையோ புரட்சி-களும் புதுமைகளும் நிகழ்ந்தும், ஏதும் நிகழா-ததுபோலச் சென்றுகொண்டிருக்கிறது. இராமா-யணக் கதையில் விதேக நாட்டையாண்ட ஜனக மன்னர் காலத்திலும் அப்பேராறு பெருகியோடி-யதாகக் கூறப்பட்டிருக்கிறது. புத்தர் காலத்தி-லும் அதனால் நாட்டில் வளம் பெருகியிருக்கிறது. ஆதி சங்கரரும் அதன் நீரோட்டத்தை நேரிற்-கண்டு மகிழ்ந்தார். கிரேக்கர் வரலாறுகளிலும் அவ்வாற்றைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்-ளது. இளமையிலேயே உலகை வெல்லும் பேராற்றல் படைத்தவர் எனப் புகழ் பெற்ற

அலெக்ஸாந்தர் என்னும் பேரரசர், அவ்வாற்றைக் கடந்தே இந்தியாவுக்குட்புகுந்தார். இப்பொழுது அவ்விடங்களில் கிரேக்க நாணயங்கள் கிடைப்பதே அதற்குச் சான்ருகும். சில இடங்களில் வேலைப்பாடமைந்த புத்தர் தலையும் அகப்படுகின்றதாம்.

## ஆற்றின் தோற்றம்

ஜீலம் நதி நூற்றைம்பது மைல்களுக்கு மேற்பட்ட நீளமுள்ளது. அதன் தோற்றம் வார்த்துவான் வரை காணப்படுமாயினும், ஶ்ரீநகருக்கு இருபது மைல் தொலைவிலுள்ள இஸ்லாம்பாது என்னுமிடத்திலிருந்தே ஆற்று வடிவில் காட்சியளிக்கின்றது. அஃது அங்கிருந்து ஏறக்குறைய எழுபது மைல் வரை, மரமுல்லா என்னும் இடம் வரை, மரக்கலங்களும் ஓடங்களும் செல்லத்தக்க ஆழமுடையதாய் விளங்குகின்றது. மரமுல்லாவிலிருந்து ஜீலம் நதி குறுகிய பகுதியில் வேகமாகப் பாய்ந்தோடுகின்றது; பரமுல்லா என்னுமிடத்தில் ஆற்றின் நடுவில் பெரும்பாறைகள் அதன் ஓட்டத்தைத் தடை செய்தலால், மெல்லச் செல்கின்றது. அவ்விடம் முன்னளில் மிகத் தொல்லை விளைப்பதாயிருந்தது. ஆற்றில் வெள்ளம் பெருகி வரும் சமயங்களிலெல்லாம் அவ்விடத்தே கரை கடந்து பொங்கி

இரு மருங்கிலுமுள்ள சிற்றூர்களேயும் வயல்களேயும் வெள்ளக் காடாக்கி அழித்து வந்தது.

## அழிவைத் தடுத்த அறிஞர்

கி. பி. எட்டாம் நூற்றுண்டில் அந்நாட்டை ஆண்ட **அவந்திவர்மன்,** அவ்வாற்ருல் விளேயும் அழிவைத் தடுக்க வழி என்னவென்று ஆராய்ந்தான் ; ஆற்றின் குறுக்கேயுள்ள பாறைகளே வெளியேற்றி, அதனே விரிவு படுத்திஞலன்றி, அடிக்கடி நேரும் அழிவைத் தடை செய்தல் இயலாது என எண்ணினுன். எனவே, ஆற்றிலுள்ள தடைகளேப் போக்கி ஆழமாக்குவதே செய்தற்குரியது என அவன் முடிவு கட்டினுன் ; ' தடைகளே எவ்வாறு அகற்றுவது ? கடுவிசையுடன் சுழித்துச் செல்லும் நீரோட்டத்தில் இறங்கிப் பாறைகளேப் பெயர்ப்பது எப்படி ?' என எண்ணினுன். அப்பொழுது அவ்வரசன் சபையிலிருந்த கலேஞர் ஒருவர்க்கு விந்தையான யோசனேயொன்று தோன்றியது. அவர் நூற்றுக் கணக்கான பொற்காசுகளே அப்பெருவெள்ளத்தில் வீசியெறிந்து, அந்தச் செய்தியை நாடெங்கும் பாவச் செய்தார். அவ்வளவுதான் ! எவ்வளவு ஆழமான நீர் நிலேயிலும் அஞ்சாது நீந்த வல்ல நூற்றுக் கணக்கான வீரர் திரண்டனர் ; பொற்காசுகளே எடுக்கப் போட்டியிட்டு

ஆற்றிற்குதித்துத் தேடினர்; முயற்சிக்குத் தடையாய் நின்ற பாறைகளைப் புரட்டித் தள்ளி-னர். கற்களும் மண்ணும் கரையில் குவிந்தன. அவற்றுடன் காசுகளும் அகப்பட்டன. இவ்வாறு நீரோட்டத்தின் தடைகள் அகற்றப்பட்டதுடன் ஆழமாகவும் ஆறு தோண்டப்பட்டது. ஆற்றால் விளைந்த கொடுமைகள் குறைந்தன. ஆயினும், வெள்ளப் பெருக்கால் விளையும் தொல்லைகள் குறையவில்லை.

## அணை கடந்த வெள்ளம்

ஜீலம் நதியில் வெள்ளம் பெருகிவிட்டால், மிகவும் பயங்கரமாகிவிடும். அது கட்டுக்கடங்-காது கரைகளை அழித்துக்கொண்டு பாய்ந்தோ-டும். ஆண்டுதோறும் ஜுலை மாதம் ஜீலம் நதியில் பெருவெள்ளத்தால் ஸ்ரீநகர் ஒவ்வொரு கண-மும் தன் பாதுகாப்புக்குத் தத்தளிக்கும் நிலை பெற்றுக் காணப்படும். ஆற்றில் வெள்ளம் பெருகி வரும் காலங்களில் வழியிலுள்ள ஏரி-களும் பன்மடங்கு பெருக்கெடுத்துக் கரைகளை-யுடைத்து அழிவுப் பணியைச் செய்தற்கு முற்-பட்டுவிடுகின்றன. அவ்வாறு தடுக்க இயலாத ஜீலம் நதியின் பெருவெள்ளம் பஞ்சாபுச் சம-வெளியடைந்ததும், பரந்து சென்று, அமைதி பூண்டு செல்கின்றது.

கிஷன்கங்கை, லிடார், வார்த்துவான், போ-ரோ முதலிய சிற்ருறுகள் பல, சில மைல் தூரம் தனித்தனியே பெருகியோடி, முடிவில் ஜீலம் நதியில் கலந்துவிடுகின்றன. இதனுலும், அது தன் நிலேயை மீறிவிடுகின்றது. 'பெருக்கத்து வேண்டும் பணிவு,' என்பதனே மனிதர்களே உணர்ந்து நடக்க இயலாத பொழுது ஆறு வரம்-பழிந்து பாய்வதில் வியப்பென்ன? காடுகளில் காட்டிலாக்காவைச் சேர்ந்தோர் அறுத்து அடுக்கி வைத்திருக்கும் பெருமரங்களே உருட்டிக்-கொண்டு, தோட்டங்களே அழித்துப் பூக்களே-யும் செடிகளேயும் வாரிக்கொண்டு, பயிர்களே அழித்து, வயல்களே உரு மாற்றி, பள்ளங்களே மேடுகளாக்கி, மேடுகளேக் கொடும்பள்ளங்-களாக்கி, கொடுங்கோலரசன் போலவும் நாட்-டை அலேத்துக் கொள்ளேயடிப்பவன் போலவும் பொருள்களேச் சூறையாடிப் பாய்ந்தோடும்.

## நீர் ஊற்றுக்கள்

காஷ்மீரின் வளத்திற்குக் காரணமான நீரூற்றுக்களும் ஏரிகளும் பலவுண்டு. அங்குள்ள நீரூற்றுக்களில் யாவர் மனத்தையுங் கவர்வது **அச்சிபால்** என்னும் நீரூற்ருகும். அது கடுங்-கோடையிலும் மாருத் தட்பமுடையது. அதன் சிறப்பை நன்குணர்ந்தவர் **நூர்மஹால்** என்-

னும் அரசியார். அவர் நமது நாட்டையாண்ட ஜிஹாங்கீர் என்னும் முகலாய மன்னரின் மாதேவியாராவர். அவ்வரசியார் அந்நீரூற்றின் நீர்வளத்தால் செழித்துப் பேரழகுடன் விளங்கிய பல பூங்காக்களை அதன் அருகே அமைத்தார்.

வீர நாகத்தருகே அமைந்த மற்றொரு நீரூற்று, மிகவும் ஆழமானது. தண்ணீர் நீலக்கடல்போல் நிறம் கொண்டு விளங்கும். அதிலிருந்து பெருகும் நீர் ஜீலம் நதியின் நீரோட்டத்தைப் பெருக்கெடுக்கச் செய்யக் கூடியது. ஜிஹாங்கீர் மன்னர் அந்நீரூற்றையும் அஃது அமைந்துள்ள இடத்தையும் பெரிதும் விரும்பித் தாம் நோயுற்றுக் கிடக்கும் காலத்தில் அங்கு அழைத்துச்செல்ல ஆணையிட்டதாகவும் கூறுவர். இன்னும் எத்தனையோ பல நீரூற்றுக்களும் ஆங்குண்டு. அவற்றுள் கந்தக நீரூற்றுக்களும், வெந்நீரூற்றுக்களும் உண்டெனக் கூறுவர். அவையெல்லாம் காட்சிக்கினிமை பயப்பதோடன்றி, நோய்க்கு அருமருந்தாகவும் பயன்படுவனவாம்.

## ஏரிகள்—தால் ஏரி

இனி ஆங்குள்ள ஏரிகளைப்பற்றி அறிய முயல்வோம் : **தால் ஏரி** என்பது அழகிலும் அமைப்பிலும் பிற எல்லா ஏரிகளிலும் மிகச்

சிறந்தது. அது மிகத் தெளிந்த நீர் மிக்கது. அது கண்ணுடி போன்று மாசு மறுவற்றுத் தெளிந்து தோன்றும். அதில் சுற்றிலுமுள்ள காடுகளும் மலைகளும் மிக நன்ருகப் பிரதி-பலித்துக் காணப்படும். நிழற்படங்களிலும் அவ்வேரியின் காட்சி மிக அழகாய் விளங்கும். அவ்வேரியைச் சுற்றி வந்து எங்கு நின்று நோக்கினும், ஒரே அழகு மயமாகவே காணப்-படும். கீழே தெள்ளத்தெளித்த நீர் நிலை—மேலே நீலவானம்—அதனையடுத்து வெண்பனி போர்த்த மலைத்தொடர்—வெயில் நுழைந்தறியாது இருண்டு தோன்றும் காடுகள்—பழமரங்கள்—பன்னிறப் பூக்களின் காடுகள்—புல் வெளிகள்—உயர்ந்து செல்லும் மலையடுக்குகள்—இவை எல்லாவற்றையும் அங்கிருந்தே காணலாம்.

## மிதக்கும் தோட்டம்

அவ்வேரியின் அழகிய தோற்றம் காரண-மாகவே காஷ்மீரம் வருவோர் அதனைக்கண்டு மகிழாது செல்வதில்லை. அதன் நடுவிற் சிறுசிறு தீவுகளும் நீரோடைகளும் மிதக்கும் தோட்டங்-களும் பலவுண்டு. மிதக்கும் தோட்டங்கள் அதன் கரையோரங்களில் அதிகம். அவைகளும் அவ்-வேரியின் சிறப்பை மிகுவிப்பனவாம். அவ்வேரி ஐந்து மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும்

பரவியுள்ளது. ஏரியில் அடர்ந்து வளர்ந்த ஒரு வகையான புல்லின் தொகுதியையும் செடிகளையும் இணைத்துக் கூடை போலப் பின்னி, அதில் மண்ணை நிரப்பி, அம்மண்ணில் பல விதப் பழ விதைகளையும் காய்கறி விதைகளையும் நாட்டுப்புற மக்கள் நட்டு வைப்பார்கள். அக்கூடைகள் நீர் மட்டத்தில் அசைந்துகொண்டிருக்கும். தண்ணீர் தானாகவே அவற்றிற்பாயும். கூடைகளில் இட்ட விதைகள் முளைத்துக் கொத்துக்கொத்தாய்க் காய்களையும் பழங்களையும் தாங்கி நிற்கும் காட்சி வியப்பிற்குரியதாகும். காய்களையும் பழங்களையும் அவற்றிற்குரியவர்கள் படகுகளில் ஏறிச் சென்று நிரப்பிக்கொண்டு வந்து, விலைக்கு விற்பார்கள்.

**மானஸபால்** என்பது மற்றோர் அழகான ஏரி. அது சிந்து ஆற்றிற்கும் அதற்கப்பாலுள்ள மலைத் தொடருக்கும் நடுவில் உள்ளது. அதிலிருந்து ஒரு சிறிய கால்வாய் சிந்து ஆற்றை வந்தடைகிறது. அக்கால்வாயில் மிகச்சிறிய படகுகளே போகலாம். அவ்வேரியினருகிலும் முகல் மன்னர் அமைத்த தோட்டம் ஒன்று, அழிந்ததுபோக எஞ்சிய பகுதியால் தன் அழகை விளக்கி நிற்கின்றது.

## ஊலர் ஏரி

**ஊலர் ஏரி** என்பது அந்நாட்டிலுள்ள ஏரிகளிலெல்லாம் மிகப் பெரியது. நம் நாட்டிலுங்கூட அவ்வளவு பெரிய ஏரி இல்லை என்றே சொல்லலாம். அவ்வேரியின் தலையாய இடத்தில் **பண்டி புரம்** என்ற சிற்றூர் அமைந்துள்ளது. அங்கிருந்து ஜில்ஜிட்டு என்னும் இடத்திற்குச் செல்லும் பெருவழி தொடங்குகிறது. அவ்வேரியில் சிந்து, ஜீலம் முதலிய பேராறுகளும் வந்து கலந்து மீண்டும் செல்கின்றன. அவ்வேரி பனிக் காலத்திலும் இளவேனிற்காலத்திலும் மிகவும் அழகான தோற்றமுடையதாய் விளங்கும். அக்காலங்களிலேதான் மக்கள் அங்குத் திரளாகச் செல்வார்கள். ஆனால், ஜூலை, ஆகஷ்டு, செப்டெம்பர் மாதங்களில் அங்கு யாரும் செல்வதில்லை. ஏனெனில், அம்மாதங்களில் கொசுக்களின் தொல்லை எல்லை மீறிவிடும். காஷ்மீரிலுள்ள எல்லா நீர் நிலைகட்குமே இதுபொருந்தும்.

**கங்காபால்** என்ற மற்றோர் ஏரி, ஹரமுகபர்வதங்களின் இடையே அமைந்துள்ளது. அது ஊலர் ஏரிக்குமேல் பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அவ்வேரியை அந்நாட்டுப் பழங்குடி மக்கள் தெய்விகமுள்ளதாகக் கருதிப் போற்றுவார்கள். அவ்வேரியே கங்கையாற்றின்

முதல் பிறப்பிடம் என அம்மக்களுட் சிலர் நம்பு-கின்றனர்.

## இயற்கை எழிலும் செயற்கைச் செல்வமும்

காஷ்மீரத்தின் இயற்கைச் செல்வம் காண்-பார் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது; உடல் உரத்தை வளர்ப்பது; அறிவிற்கு விருந்தளிப்பது; உயிருணர்ச்சியைத் தூண்டிச் செம்பொருளை உணர்ந்து திளைக்கச் செய்வது. அதன் அழகு கல்லாரையும் கவிஞராகவும் கலைஞராகவும் ஆக்க வல்லது. எல்லையற்ற அவ்வியற்கையழகில் உள்-ளத்தைப் பறி கொடுத்தவர், செயற்கை வகை-யாலும் அதன் எழிற்கோலத்தைப் பெருக்கி மகிழ்ந்தனர். அவ்வாறு அதன் அழகுத் திருப்-பணியை ஆர்வத்துடன் செய்தமைத்த மன்னர் பலர், கோட்டைகளைக் கட்டினர். சிலர், கோயில்-களை அமைத்தனர். குளங்களையும் கால்வாய்-களையும் வெட்டினர் சிலர்; இன்னும் சிலர் பல வகையான மாளிகைகளை அமைத்து அதன் அழகைப் பெருக்கினர். முகலாய மன்னர் கண்-ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் எண்-ணற்ற பூம்பொழில்களை அமைத்துப் புகழ்-கொண்டனர்.

## அரசியாரின் அழகுப்பணி

காஷ்மீரத்தை முதலில் முகலாயப் பேரரசுக்குள் இணைத்தவர் அக்பர் சக்கரவர்த்தியாரே ஆவர். அவரே புகழ் பெற்ற ஹரிபர்வதக் கோட்டையைக் கட்டியவர். அவர்க்குப் பின் அரசு பூண்ட ஜிஹாங்கீர் மன்னரின் ஆருயிர்த் தேவியாரான நூர்மஹால் என்னும் அரசியாரின் அழகுணர்ச்சியால் அமைந்த பூம்பொழில்கள் எண்ணில. அவர்க்குப் பின் வந்த முகல் மன்னர்களும் அத்திருப்பணியை விடாது, அந்நாட்டின் எழிலையும் வளத்தையும் பெருக்கினர்.

ஜிஹாங்கீர் அரியணை ஏறிய சில ஆண்டுகளில் காஷ்மீரத்தின் அழகை நேரிற்காணப் பரிவாரத்துடன் புறப்பட்டார். அவரிடம் அன்பு பூண்டொழுகிய அரசியாரும் மகளிர் ஆயத்துடன் கணவரைத் தொடர்ந்து சென்றார். இயற்கைக் காட்சி நிறைந்த இடங்களில் தங்கித் தங்கிச் சென்றார் அம்மன்னர்; தால் ஏரியைக் கண்டதும் அங்குக் கூடாரம் அமைத்துத் தங்கினார். அரசர் அரசியாரை அழைத்து அவ்வழகிய காட்சியைக் காட்டினார். எங்கு நோக்கினும் அழகு பொங்கும் அக்காட்சியைக் கண்ட அரசியார் வியந்து நின்றார்; அவரது கற்பனைத் திறன்

கரை கடந்து பெருகியது. அவரது மனக் கண்ணில் அற்புதக் காட்சிகள் பல தோன்றின. பிறகு அவர் அங்குநின்றும் புறப்பட்டு மலைச் சரிவினை அடைந்தார்; பசும்புல் வெளிகளைக் கண்டார்; ஆற்றினையும் நீரூற்றினையும் கண்டு மகிழ்ந்தார்; சுனையூற்று நீரைச் சுவைத்து மகிழ்ந்தார்; மலர் மணத்தை அள்ளி வரும் செழுங்காற்றினை நுகர்ந்தார்; தம் கணவனுர் முகம் நோக்கி, "இவ்வூற்றுக்களிலும் ஏரிகளிலும் பெருகியோடும் இனிய நீர் வளம் கொண்ட புல் வெளிகளையும் ஏரி கரைகளையும் ஊர்ப்புறங்களையும் நாம் அழகுபடுத்தலாம்," எனக் கூறினர்.

அவ்வளவில் அரசராணை பிறந்தது. நூர்மஹாலின் நேர் மேற்பார்வையிலேயே பூம்பொழில்கள் பல எழுந்தன. வரிசை வரிசையாக வண்ண மலர்ச் செடிகள் வைக்கப்பட்டன. இடையிடையே நறுங்கனி மரங்கள் நடப்பட்டன. ஆங்காங்கு நீர்த்துருத்திகள் பல அமைக்கப்பட்டன. பெரிய நீர் ஓடைகளும் சிறு சிறு வாய்க்கால்களும் அமைந்தன. நீரூற்றுக்களிலிருந்து அப்பூங்காக்களுக்கு நீர் பாய்ந்தது. நீரோடைகளிலும் வாய்க்கால்களிலும் ஊற்று நீர் சலசலவென்ருேடியது. நீர்த்துருத்திகள் நாற்புறத்தும் விசிறிபோல நீரையள்ளி வீசின. இவ்-

வாறு அழகுறச் செய்தமைத்த பூங்காக்களில் சிலவற்றிற்கு அரண்மனை மகளிர், 'ஆடவர் காண்பரோ!' என அஞ்சுதலின்றி உலவுவுதற்-கேற்ற வண்ணம் உறுதியான சுற்றுச் சுவர்கள் எழுப்பப்பட்டன. இவ்வாறு இன்பப் பூங்காக்கள் தம் மனம் போல அமைந்த பிறகும் அரசியார் கணவரை நோக்கினர். அவர் கடைக்கண் கருத்தை நொடிப்பொழுதில் நிறைவேற்றும் அரசர், டில்லி மாநகரிலிருந்து சலவைக் கற்களை-யும் அப்பொழுதே தருவிக்க ஆணை பிறப்பித்-தார். சலவைக் கற்களுடன் கட்டடக் கலையில் வல்ல கம்மியரும் வந்து சேர்ந்தனர். பூங்காக்-களின் நடுவில் சலவைக் கல் மாளிகைகள் அமைந்தன. இவ்வாறு அரசியார் விருப்பத்தின் வண்ணம் அமைந்த பூம்பொழில்கள் பல. ஜிஹாங்கீர் மன்னர் தாமாகவும் சில பூங்காக்களை அமைத்தார். அவர்க்குப் பின் வந்த முகலாய மன்னரும் பற்பல பூங்காக்களை அமைத்து அழகுப் பணி புரிந்தனர்.

முகலாய மன்னர் அமைத்த பூங்காக்களில் **ஷாலிமார் தோட்டம்** உலகப் புகழ் பெற்றது. **நசீம்பாகு** என வழங்கப்படும் மற்றொரு பூங்கா-வும் அத்தகையதே. **நிஷாத் தோட்டம்** என்பது இன்பப் பூம்பொழில் என்றே வழங்கப்படும். இவை போன்ற சில பூம்பொழில்களே எஞ்சி

உள்ளன. நூற்றுக்கணக்கான பொழில்கள் அழகுணர்ச்சியற்ற பகைவரால் அழிக்கப்பட்டன; காலத்தால் அழிந்தன சில. இப்பொழுதும் அப்பூங்காக்களில் பசும்புல் அடர்ந்து விளங்கும் அழகான நடைப் பாதைகளில் நடந்து சென்ருலே நாம் மண்ணுலகில் இருப்பதை மறந்துவிடுவோம்; நம் எதிரே ஒரு கற்பனையுலகம் தோன்றுவதைக் காண்போம்.

## படகுகளின் காட்சி

காஷ்மீரில் மற்ருேர் அழகான காட்சி, ஆறுகளிலும் ஏரிகளிலும் கூட்டம் கூட்டமாய் ஓடங்கள் செல்வதாகும். மழை காலத்திற் பேயுருக் கொண்டு பெருக்கெடுத்தோடும் ஜீலம் நதி மற்றைக் காலங்களில் தாயென அன்பும் அமைதியும் விளங்கச் செல்லும். அவ்வாற்றில் ஓடத்திற் செல்வது மகிழ்வூட்டும் இன்பக் காட்சியாகும். படகில் செல்லும்பொழுது ஆற்றின் இரு மருங்கிலும் தோட்டங்களும், வீடுகளும், கோயில்களும், மசூதிகளும் மாறி மாறித் தோன்றும் காட்சி அழகாயிருக்கும்.

அங்குக் காணப்படும் ஓடங்கள் பல வேறு வடிவினவாம். மீன் பிடிப்பதற்குப் பயன்படும் கட்டு மரம் போல்வனவும் அங்குண்டு. திறந்த ஓடங்களும் வீடுகள் போன்று மேற்கூரையுடைய

ஓடங்களும் பல. சில படகுகள் மிக நீளமான வடிவு கொண்டவை. படகுகளில் பழங்களையும், காய் கறிகளையும், தானியங்களையும் கடைகளில் வைத்திருப்பதுபோல அடுக்கி வைத்துக்கொண்டு வாணிபம் செய்வர். அப்படகுகள் மெல்லச் சென்றுகொண்டிருக்கும். கரையருகில் நிற்போர் அப்பண்டங்களை விலை கொடுத்து வாங்கிச் செல்வர். உல்லாசமாகச் செல்வதற்கேற்ற 'படகு-களும் பல உண்டு. அப்படகுகளிலேயே கட்டில்-களும் நாற்காலிகளும் அமைந்திருக்கும். சாய்வு நாற்காலியிற் சாய்ந்துகொண்டு காஷ்மீரின் அழகிய காட்சிகளைப் பார்த்துக்கொண்டே போகலாம். நமக்கு வேண்டும் பண்டங்களை அருகில் வரும் வணிகப் படகில் கேட்டுப் பெற்-றுக் கொள்ளலாம்.

## படகோட்டியின் குடும்பம்

படகோட்டிகள் குடும்பத்துடன் படகுகளி-லேயே உண்டுறங்கி வாழ்வார்கள். படகுகளி-லேயே அறைகள் அமைக்கப்பட்டிருக்கும். கணவன் துடுப்பு வலித்துச் சோர்வுற்ருன் என்ருல், மனைவி துடுப்பைப் பிடித்துப் பட-கோட்டுவாள். அப்பொழுது கணவன் அங்குள்ள கட்டிலில் கால் நீட்டிப் படுத்துத் தான் ஆற்றின் நடுவில் இருக்கும் நினைவு இல்லாதவன்போலவே

கவலையற்று உறங்குவான். மனைவி அட்டில் வேலையைப் பார்க்கும் பொழுது எட்டு வயதும் நிரம்பாத சிறுவர்களும் படகோட்டத் தொடங்குவார்கள். அவர்கள் அச்சமின்றிப் படகுக்குப் படகு தாவிச் செல்வது விந்தையாய் இருக்கும். ஆற்றில் வெள்ளம் பெருகிவிடுமாயின், அப்படகுப் போக்கு வரத்து அறவே நின்றுவிடும். படகுகளெல்லாம் ஓரிடத்தே சேர்ந்து கயிறுகளால் கட்டப்பட்டிருக்கும். வெள்ளம் குறைந்த மறு கணமே ஆற்றில் படகுகளை காணலாம். இவ்வாறே ஏரிகளிலும் பல வகைப் படகுகள் ஓடிக்கொண்டிருக்கும்.

## 6. தொழில்கள்

### பல்பொருட்செல்வம்

காஷ்மீரம் வேளாண்மையையே தலையாய தொழிலாகவுடையது. அங்கு நெல், கோதுமை, சோளம், சாமை, பட்டாணி, எண்ணெய் வித்-துக்கள், கடுகு, பருத்தி, புகையிலை முதலியன பயிர் செய்யப்படுகின்றன. இவையன்றிக் காடு-படு செல்வங்களாகவுள்ளவை மரங்கள், வண்-ணச் செடி கொடிகள், ஆப்பிள், பீர், பீச்சுப் போன்ற பல வகைப் பழங்கள் முதலியனவாம். அங்குக் காடுகள் தாமாகவே செழித்து வளர்ந்-துள்ளன. ஆப்பிள் மரங்களை வேருடன் பெயர்த்து வந்து மக்கள் தங்கள் வீட்டுக் கொல்லைப்புறங்களில் நடுவார்கள். அவை அம்-மண் வளத்தால் முன்போலச் செழித்துப் பயன் தரும். பீர், குயின்ஸ் என்னும் பழங்கள் மிகுதி-யாகக் கிடைக்கின்றன. திராட்சைப் பழங்-களும் வாதுமைக் கொட்டைகளும் அளவிறந்து காணப்படுகின்றன. பழத்தோட்டங்களில் அவை குலைகுலையாய்ப் பழுத்துத் தொங்கும். பட்டுத்

தொழிலுக்குப் பயன்படும் முசுக்கட்டைச் செடி-கள் அந்நாட்டு மக்களுக்குச் சுவை மிக்க உண-வாகவும் பயன்படுகின்றன. கோதுமை, பார்லி, பீன்ஸ் முதலியன வசந்தகாலத்தில் அறுவடைக்-குரிய நிலை பெறும். நெல், சோளம், பருத்தி, சாமை, புகையிலை முதலியன இலையுதிர் காலத்-தில் விளைச்சல் முற்றி நிற்கும். கம்பளி, பட்டு, ஆட்டு மயிர், தோல்கள், கொம்புகள், தேன் முதலியனவும் அங்குக் கிடைக்கின்றன.

அந்நாட்டில் உலோகச் செல்வங்களைப் பெறும் துறையில் இன்னும் சீரிய முயற்சி செய்யப்படவில்லை. இரும்பு, பராக்சைடு முதலிய கனிப்பொருள்கள் கிடைக்கும் இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளி, போராக்ஸ், ஆஸ்பெஸ்தாஸ் முதலிய கனி வகைகள் லடாக்-கில் மிக்குள்ளன என்பது அறியப்பட்டிருக்-கிறது. சில மணி வகைகளும் கிடைக்கின்றன. உணவிற்கின்றியமையாத உப்புமட்டும் அங்குக் கிடைப்பதரிது.

## பல்வகைத் தொழில்கள்

தான்றிக்காய் வகைகள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பழமையில் ஊறிக் கிடக்-கும் அந்நாட்டு மக்களின் முயற்சிக் குறைவால், நாட்டின் இயற்கைச் செல்வங்கள் வீணுக்கப்-

படுகின்றன. எவ்வளவோ பழங்கள் அழுகிப்போகின்றன. அந்நாட்டின் காடுகளில் செழித்து வளரும் தேவதாரு என்னும் மரம் கட்டட வேலைகட்குப் பயன்படுகின்றது. கோயில்களின் தூண்கள் அம்மரங்களாலேயே அமைக்கப்பட்டுள்ளன. அம்மரங்களைக்கொண்டே படகுகளும் செய்யப்படுகின்றன. அதன் அளவாலும் உறுதியாலும் பல வகையில் அம்மரம் பயன்படுகின்றது.

தோல் பதனிடுவதும் சாய வேலைகளும் அங்கு நடைபெறுகின்றன. அங்குள்ள மெல்லிய மரங்களைக் கூழாக்கிக் காகிதம் செய்கிறார்கள். ஆனால், அக்காகிதங்கள் எழுதுவதற்கு அவ்வளவாகப் பயன்படுவதில்லை. அவை தண்ணீர் ஊறுத் தன்மையை உடையனவாய் இருப்பதால், அவற்றைப் பலகணிகளுக்குக் கண்ணாடிகட்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார்கள். சிலர் வீடுகளில் திரைகளாகவும் போர்வைகளாகவும் பயன்படுத்துகின்றனர். அந்நாட்டு மக்களுக்கு மீன் உணவு பெருவழக்காயிருத்தலால், மீன் பிடிக்கும் தொழில் அங்கு ஓரளவு பெருகியுள்ளது. மீன்பிடிப்போர் ஆறுகளிலும் ஏரிகளிலும் படகுகளில் ஏறிச்சென்று வலை வீசி மீன் பிடித்து வருவர்.

## புகழ் மிக்க சால்வை

காஷ்மீர நாட்டின் தொழில்களில் உலகப் புகழ் பெற்றது சால்வைத் தொழிலாகும். அந்நாட்டுச் சால்வைகளைப்பற்றிய கதைகள் புராணங்களி-லும் வரலாறுகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.

இராமாயண காலத்திலும் அச்சால்வை-யைப் பற்றிய செய்தி கூறப்பட்டிருக்கிறது. விதேக நாட்டரசராகிய **ஜனகர்**, தம் அருமைப் பெண் **சீதா** தேவியை இராமருக்குத் திருமணம் செய்து வைத்து முதன்முதலாக மணமக்களை அயோத்திக்கு அனுப்பும் பொழுது, பல வகை-யான சீர் வரிசைகளைக் கொடுத்தனுப்பினர் என்றும், அச்சீர் வரிசைகளில் புகழ் பெற்ற காஷ்மீர்ச் சால்வைகளையும் சேர்த்தனுப்பினர் என்றும் கதைகள் கூறுகின்றன. இனிப் பாரத காலத்தும் அதன் புகழ் பேசப்படுகின்றது. **திருதராட்டிரன்** தன் அரண்மனைக்கு முதன்-முதலாகக் கண்ணபிரான் வந்த பொழுது காஷ்-மீர்ச் சால்வையால் போர்த்துப் பெருமை பாராட்டினன் என்று கூறப்படுகிறது. இவ்வாறு காஷ்மீரச் சால்வையைப்பற்றி வழங்கும் புரா-ணச் செய்திகள் பலவாம்.

வெற்றிவீரனாகிய **நெப்போலியன்**, எகிப்து நாட்டுடன் போர் செய்து வெற்றி பெற்ற காலை,

வெற்றிப் பரிசாகக்கிடைத்த காஷ்மீர்ச் சால்வைகளைத் தன் மனைவியான ஜோஸபைன் இராணிக்கு அனுப்பிவைத்தான் என்று வரலாறு கூறுகிறது. அச்சால்வைகளைப்பெற்ற ஜோஸபைன், அவற்றின் அழகிலும் அமைப்பிலும் பெரிதும் ஈடுபட்டு, அரச குடும்பத்தினர் யாவரும் அத்தகைய சால்வைகளைப் போர்த்துக்கொள்வது நாகரிகச் சிறப்பிற்குரியதாகும் என விளம்பரம் செய்ததாகவும் கூறப்படுகின்றது. அது முதல் மேனுடுகளில்—சிறப்பாகப் பிரான்ஸ் நாட்டில்—காஷ்மீர்ச் சால்வைகளுக்குப் பெருமதிப்பு இருந்து வந்தது. அக்பர் பேரரசரும் காஷ்மீர்ச் சால்வைகளைப் பெரிதும் விரும்பிப் போற்றினர் என்று **அபுல்பாஸல்** என்ற கவிஞர் எழுதியிருக்கிறர். அது முதல் முகலாய மன்னர் அரசியர்க்குரிய தனி மாளிகைகளில் காஷ்மீர்ச் சால்வைகள் பெரிதும் அழகு செய்தன.

## சால்வைத் தொழில்

காஷ்மீர்ச் சால்வைகள் சித்திரப் பின்னல் வேலைப்பாடுகளாலேயே சிறந்த தோற்றமுடையனவாய் விளங்குகின்றன. இப்பின்னல் வேலைகள் கையாலும் தறிகளின் துணையாலும் செய்யப்படுகின்றன. கையால் செய்யப்படுவது, தேவை நிறைவேறும் அளவிற்குச் செய்ய இய-

லாதாயினும், அழகுணர்ச்சியும் சிற்பத்திறனும் மிக்க காஷ்மீர மக்கள் அதனைப் பெரிதும் விரும்பிச் செய்வார்கள். அஃது அங்கு ஒரு குடிசைக் கைத்தொழிலாய் வளர்ந்து, அந்நாட்டு மக்களின் வாழ்க்கைக்குப் போதுமான வருவா-யினை அளித்துவிடுகிறது. அவ்வாறு பூவேலை செய்யப்பெற்ற சால்வைகள் அயல் நாடுகளுக்-கும் அனுப்பப்படுகின்றன.

காஷ்மீர மக்கள் அந்நாட்டின் பூக்கள், கனிகள், இலைகள், கொடிகள், பறவைகள் என்-பனவற்றின் வடிவங்களையே சித்திரப் பின்னல் வேலைக்குத் தேர்ந்தெடுப்பர். விலங்குகளின் உருவங்களையும் மனித வடிவங்களையும் பின்னல் வேலைக்கு எடுப்பதில்லை. சினூர் மரத்தின் இலைகளும், மலர்ச் செடிகளும், பறவைகளின் தோகைகளும், தூவிகளும், வாதுமைக் கொட்டை ஆப்பிள் பழம் முதலியவற்றின் வடிவங்களும், தாமரை அல்லி முதலிய மலர்-களும், கிளி வானம்பாடி முதலிய பறவைகளும் ஓவியவுருவங்களாய்ப் பின்னல் வேலையில் இடம்-பெறும்.

காஷ்மீரத்தின் இவ்வழகிய வேலைப்பாடுகள் அமைப்பில் பெரும்பாலும் பாரசீக நாட்டு வேலைப்பாடுகளுடன் ஒத்து விளங்கும். இப்-பின்னல் வேலை கி. பி. பதினைந்தாம் நூற்றாண்-

டில் இந்நாட்டை ஆண்ட ஜைன்-உல்-அபி-தீன் என்ற மன்னவனுல் தோற்றுவிக்கப்-பட்டது எனக் கூறப்படுகிறது. அவ்வரசன் பாரசீகத்திலிருந்து இவ்வேலையில் கைதேர்ந்த-வர்களைக் கொணர்ந்து, அவர்கள் உதவியால் இக்கலைப் பணியையும் இது போன்ற பிற தொழில்களையும் பரப்பினுன்.

காஷ்மீர் காசிடா உலகப் புகழ் பெற்றது. இது பட்டாலும் கம்பளியாலும் நெய்யப்படும். இது கண் கவரும் வண்ணச் சிறப்பு மிக்கது. இது வினைத்திறம் விளங்கும் சித்திரப் பூம்-படாமாய் விளங்குவது. சால்வைகள், ஆடை-கள், சிறுவர் சிறுமியர் உடைகள், மெத்தையின் மேலுறைகள், கைக்குட்டைகள் முதலியவையும் இக்காசிடா வகையால் இயற்றப்படும். காசிடாத் தையல் வேலை தனிச் சிறப்புடையது. இது ஒழுங்கும் வனப்பும் மிக்கது. இத்தையல்கள் பொறிகளால் செய்யப்படும் தையல்களாகவோ, தறிகளில் செய்யப்படும் பின்னல் வகை-களாகவோ சிறப்புக் குன்றுது விளங்குவன. இச்சிறப்பிற்கு இத்தையலின் அமைப்பே கார-ணம். உயர்ந்த காசிடா, அமைப்பில் இரு புற-மும் ஒன்று போல விளங்கும். இச்சிறப்பைப் பிற பின்னல் வேலைகளைக் கொண்ட சால்வை-களிலோ ஆடைகளிலோ நாம் காண முடியாது.

அதனுலேயே காசிடா விலை உயர்ந்ததாகிறது. காசிடா என்று பொது வகையால் கூறப்பட்டாலும், ராவுகாரி, ஜாலக்டோஸி, வடசிக்கன், டோரியா, தலைக்கார் என வழங்கப்படும் பல வகைத் தையல்களும் அவ்வினத்தைச் சேர்ந்தவைகளே.

## நம்டாவும் குப்பாவும்

காசிடாத் தொழில் வகையில் 'நம்டா' என்பது முக்கியமானதொரு பிரிவாகும். நம்டா வகையைச் சேர்ந்த சால்வைகளும், ஆடைகளும், உள் நாட்டில் மட்டுமன்றி, அயல் நாடுகளிலும் பெரிதும் விரும்பப்படுவதால், பொருளாதாரத் துறையில் இத்தொழில் மிகவும் முக்கியமானதாகும். இத்தொழில் நாட்டுப்புறங்களிலுள்ள ஏழை மக்களின் பசியைப் போக்கும் பெருவரமாய் விளங்குகின்றது.

இதனையடுத்து, 'குப்பா' என்ற தொழில் சிறந்து விளங்குகின்றது. இதுவும் பின்னல் தொழிலில் ஒரு வகையே. ஸ்ரீநகருக்கு முப்பத்தாறு கல் தொலையிலுள்ள அநந்த நாகம் என்ற சிற்றூர், இத்தொழிலுக்குப் பேர் பெற்றது. இது கழிக்கப்பட்ட கம்பள மயிர்களாலும் கிழிந்து போன சால்வைகளாலும் செய்யப்படும் தொழிலாகும். பழமையான ஆடைகளையெல்லாம்

எடுத்துச் சேர்த்துச் சாயமிட்டுப் பிறகு இந்தக் குப்பா என்ற பூவேலையைச் செய்து, புதுமை நல்கி விற்பனை செய்வர். இத்தையல் பல வேலைப்பாடுகள் விளங்கத் தொடர்ச்சியாக அமைக்கப்படுமாதலால், இவ்வாறு தைக்கப்பட்ட பொருள் மெத்தென்றிருக்கும். இது படுக்கைக்கு மிகச் சிறந்து பயன்படுகிறது.

ராவுகாரி என்ற மற்றொரு வகையான சித்திரப் பின்னல் வேலையும் சிறந்து விளங்குவதாகும். இது பட்டு என்ற கம்பள வகைகளிலும் சால்வைகளிலும் சிறப்பாகப் புனையப்படும். ஆறு முழ நீளமும் இரண்டு முழ அகலமுமுள்ள சால்வைகளே இத்தொழிலுக்கு ஏற்றனவாகக் கொள்ளப்படும். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பாலும் உழவர்களே. அவர்கள் உழவுக்குரிய நேரம் போக, எஞ்சிய நேரங்களில் இத்தொழிலில் ஈடுபடுவார்கள். பாஷ்மினுச் சால்வைகளிலும் ஆல்வான் முதலிய ஆடை வகைகளிலும் இப்பின்னல் வேலை செய்யப்படும்.

## பட்டுத் தொழில்

காஷ்மீரத்துப் பட்டுத் தொழிலும் மிகவும் பழமையானது. கிரேக்கர்களும் சிதியர்களும் சிறந்திருந்த காலத்தில் காஷ்மீர் பாக்டீரியா நாட்டுடன் தொடர்பு கொண்டு, அந்த நாட்டுப்

பட்டு நூலை வாங்கி நெய்து, டமாஸ்கஸ் முதலிய நகரங்களுக்கு அனுப்பி வாணிபம் செய்ததாகக் கூறப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரண வீர சிங்கு என்ற அரசர், மறைந்து போன பட்டுத்தொழிலை மீளவும் உயிர்ப்பிக்கக் கருதினார். பட்டுத் தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டன. அதன் பிறகு அரசாங்கத்தாரே அத்தொழிலை மேற்கொண்டு நடத்தலாயினர். இரண்டாவது உலகப் பெரும்போரில் விமானங்களிலிருந்து குதிக்கும் பாராசூட்டுக் குடைகளைச் செய்வதற்குக் காஷ்மீர்ப் பட்டுத் தொழிற்சாலைகள் பெரிதும் பயன்பட்டன.

## வீட்டுத் தொழில்கள்

கூடை முடையும் தொழிலும் அந்த நாட்டில் பெருவழக்காயுள்ளது. படகு செய்யும் தொழில் அந்த நாட்டில் பழமை வாய்ந்த தொழில்களில் ஒன்று. மரவேலையில் காஷ்மீர மக்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்கள் கலையுணர்வும் வினைத் திறமும் அவர்களை அத்தொழிலில் மிக்க தேர்ச்சியுடையவர்களாக்குகின்றன. வாணிபத்திற்குரிய பொருள்களை ஏற்றிச் செல்லும் ஓடத்திலிருந்து சிறியனவும் பெரியனவுமான பல வகையான ஓடங்கள் செய்யப்படு-

கின்றன. நாற்பது ஐம்பது படகோட்டிகள் செலுத்தும் அளவில் மிகப் பெரிய படகுகளும் அங்குண்டு.

அந்நாட்டில் சட்டி பானைகளும் அழகாகவும் உறுதியாகவும் செய்யப்படுகின்றன. இரும்பு வேலையும் உருக்கு வேலையும் நடைபெறுகின்றன. மருத்துவத் தொழிலுக்குப் பயன்படும் சத்திர வகைகள் கூட அங்குச் செய்யப்படுகின்றன. தேனெடுத்தல் அங்கு ஒரு குடிசைத் தொழிலாய் உள்ளது. நாட்டுப் புறங்களில் ஒவ்வொரு வீட்டிலும் தேன் கூடு வைத்திருப்பர். ஒவ்வொரு கூட்டிலிருந்தும் ஆண்டொன்றுக்கு எட்டுச் சேர் வரை தேன் கிடைக்கும். அதன் மெழுகைத் தோல் தைப்பவர்க்கும் தட்டார்களுக்கும் விற்பனை செய்வார்கள். இவ்வாறு பல வகையான தொழில்களும் இன்னும் பழமை மாருமலே நடைபெறுகின்றன. புதிய கருவிகள் இன்னும் பெருவழக்கில் கையாளப்படவில்லை.

## 7. மக்கள் வாழ்க்கை

### நிலப்பரப்பும் மக்கள் தொகையும்

காஷ்மீரின் நிலப்பரப்பு 84471 சதுர மைல்கள். அது ஹைதராபாது மாநிலத்தைவிடச் சற்றுப் பெரியது. காஷ்மீரில் முப்பத்தொன்பது நகரங்களும், எண்ணுயிரத்து எழுநூற்று நாற்பது சிற்றூர்களும் உள்ளன. அந்நாட்டின் மக்கள் தொகை நாற்பது இலட்சத்து இருபத்து ஐயாயிரம் என்று கூறப்படுகிறது. லடாக்கு, அஷ்டோக்கு, ஜில்ஜிட்டு என்னும் எல்லையிலுள்ள மாவட்டங்களில் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களும், ஜம்மு மாகாணத்தில் சற்றேறக்குறைய இருபது லட்சம் மக்களும், காஷ்மீர் மாவட்டத்தில் பதினேழு லட்சத்துக்கு மேற்பட்ட மக்களும் வாழ்கின்றுர்கள். அவர்களில் நூற்றுக்கு எழுபத்தேழு அளவிற்குப் பெரும்பாலான மக்கள் முகமதியர்கள். நூற்றுக்கு இருபதின்மர் இந்துக்கள். எஞ்சியவர் சீக்கியரும் பௌத்தரும் இதர வகுப்பினரும் ஆவர்.

ஸ்ரீநகர் காஷ்மீரத்தின் தலைநகராகும். இது சூரியநகர் என்றும் வழங்கப்படும். இந்நகரத்தை உருவாக்கியவர் அசோகர். கடல் மட்டத்திற்குமேல் 5250 அடி உயரத்தில் இது அமைந்துள்ளது. இதன் பரப்பு, பதினொரு சதுர மைல்களாகும். இங்கு இரண்டு லட்சம் மக்களுக்குமேல் வாழ்கின்றார்கள். ஜீலம் நதி இந்நகரின் நடுவே ஓடி அழகு செய்வதோடன்றி, கழிவுப் பொருள்களையெல்லாம் கடத்திச் செல்கின்றது. காஷ்மீரத்தின் தொழில் துறையில் இந்நகரே நடுநாயகமாயுள்ளது. பெரிய தொழிற்சாலைகளெல்லாம் இங்கேயே அமைக்கப்பட்டுள்ளன. காஷ்மீரத்தின் மிகப் பெரிய நகரமாகிய ஸ்ரீநகர், மத்திய ஆசியாவின் வாணிகத்துக்கே உயிர் நாடியாயுள்ளது. கோடை காலத்தில் இந்நகர், கண் கொள்ளாக் காட்சியளிக்கும். இங்கமைந்துள்ள ஹரிபர்வதக் கோட்டையும், சங்கராசாரியர் மலைக் கொடுமுடியும் நெடுந்தொலைவில் வருகின்றவர்களுக்கும் தோற்றமளித்து, அவர்களைத் தம்பால் ஈர்க்கும் தகைமையன. முகலாயர் காலத்துப் புகழ்மிக்க பூம்பொழில்களும் ஷாலிமார், சல்மாஷாஹி, நிசாத்து முதலிய பூஞ்சோலைகளும் இங்கமைந்து மேலும் அழகு செய்கின்றன.

## மக்கள்

காஷ்மீரத்தின் பழங்குடி மக்கள் இந்துக்கள். அவர்களுள் கற்றவர்கள் **பண்டிதர்கள்** என்று வழங்கப்படுவார்கள். பெரும்பான்மை மக்களான முகமதியர்களே உழவர்களாகவும், பிற தொழிலாளர்களாகவும், வணிகர்களாகவும் விளங்குகின்றார்கள். அந்நாட்டு மக்கள் மதத்தால் இங்ஙனம் பிரிந்து நிற்பினும், ஒரு மனப்பட்டு வாழ்ந்து வருகின்றார்கள். எல்லாரும் அன்பு கொண்டு ஒரு நாட்டு மக்கள் என்ற உணர்வுடன் வாழ்கின்றனர். இது பாரதநாட்டில் நிலைபெறவேண்டிய பண்பிற்கு எடுத்துக்காட்டாகும்.

காஷ்மீர மக்கள் உடல் உறுதி வாய்ந்தவர்கள். பெண்களோ, அழகும் வலிமையும் உடையவர்கள். பெண்கள் கூலங்களைத் தாமே குற்றி உணவாக்குவதோடன்றி, எஞ்சிய நேரங்களில் கணவர் புரியும் கைத்தொழிலுக்கும் உதவிசெய்வார்கள். இளங்குழந்தை முதற்கொண்டு கிழவர் வரை எல்லாரும் உடல் நலமுடையவராகவே காணப்படுவர். அவர்கள் தங்கள் சுற்றுப்புறங்களைத் தூய்மையாகவும் உடல் நலத்திற்கேற்ற முறையிலும் வைத்துக்கொள்ளப் பழகியிராவிட்டாலும், இயற்கை அவர்களுக்குப் பெருந்-

துணை புரிகின்றது. சால்வை நெசவில் சிறுவர்களும் துணை செய்வார்கள். சால்வைகளில் புனைய வேண்டிய வண்ண ஓவியங்கள் காகிதத்தில் வரையப்பட்டிருக்கும். சால்வை நெசவிற் கைதேர்ந்த கிழவன், அதைப் பார்த்துக்கொண்டு, 'சிவப்பு ஒன்று; நீலம் மூன்று; பச்சை ஏழு,' என்று இப்படி மாறிமாறிச் சொல்வான். தறியில் அமர்ந்திருக்கும் சிறுவர், அதன்படியே நெய்வர். சால்வைகளில் கண்ணைக் கவரும் சித்திரங்கள் காட்சியளிக்கும். இவ்வாறு நெய்வது நம்மவர்க்குப் புதுமையன்று. பழந்தமிழர் ஆடையின் விளிம்புகளில் பல வகையான சித்திரங்களை நெய்யக் கற்றிருந்தனர். அத்தகைய ஆடைகளுக்குச் **சித்திரக்கம்மி** என்னும் பெயர் வழங்கியது.

காஷ்மீர நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள், எளிய தோற்றமுடையராகவே காணப்படுவார்கள். நகர்ப்புறங்களில் வாழும் செல்வரும் உயர்நிலையினரும் கலைப்பண்பும் கம்பீரமான தோற்றமும் உடையராய் விளங்குவர். முகமதியர்களில் முல்லாக்களும் இந்துக்களில் பண்டிதர்களும் கற்றவர்களாக மதிக்கப்படுவார்கள். சிறுவர்கள், விளையாட்டுக்களில் ஆர்வம் மிக்கவர்கள். வீடுகளில் ஆடவரும் பெண்டிரும் அன்பு கொண்டு அமைதியாய் வாழ்வர். கணவ-

ருக்கு வேண்டுவனவற்றைச் செய்வது தங்கள் கடமையெனப் பெண்கள் கருதுவார்கள். அவர்களுக்குள் எப்பொழுதாவது சண்டை மூண்டுவிட்டாலும், ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடாது, நாள் முழுதும் சண்டையிட்டு, இருவரும் ஓய்ந்த பிறகே அமைதி கொள்வர்.

## தட்ப வெப்ப நிலை

காஷ்மீர மக்கள் பிறந்த நாள் கொண்டாட்டங்களையும் திருமண விழாக்களையும் செலவைக் கருதாது விரிவாகச் செய்து மகிழ்வார்கள். அங்குள்ள தட்ப வெப்ப நிலையும் வாழ்க்கைக்கேற்றதே. இரண்டொரு திங்கள் கடுங்குளிரால் நடுங்கும் நிலையுளதாயினும், சுடும் கதிரால் மக்கள் துன்புறுதல் எப்பொழுதும் இல்லை. கடுங்குளிரில் வீடுகளில் சட்டிகளில் தீ வளர்ந்துகொண்டிருக்கும். சிலர் அக்கணப்புச் சட்டிகளைத் தம் மார்பில் வைத்துக்கொண்டே உறங்குவதும் உண்டு. அதனுல், அவர்கள் உடல் வெந்து புண்ணுவதும் உண்டு. அவர்களுடைய வீடுகள் கடுங்குளிரையும் கொடிய வெப்பத்தையும் தடுத்துக்கொள்ளும் வசதிகளுடன் அமைக்கப்படுவதில்லை. வேனிற்காலத்தில் கொசுக்களும் பிறவும் படை படையாய் வந்து தொல்லையளிக்கும். குளிர் காலத்திலோ, பலகணிகளெல்லாம்

காகிதங்களால் மூடப்பட்டாலும், பனியைத் தடுக்குமாறில்லை. எனவே, ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் அனைவரும் தனித்தனியே கணப்புச் சட்டியொன்றை வைத்திருப்பர். சட்டியில் விறகுச் சுள்ளிகளையும் கரியையும் இட்டுத் தீமூட்டி வைத்திருப்பர்.

## இயற்கைப் பகைகள்

இக்குளிரையும் கொசுக்களையும் தவிர, காஷ்மீர மக்களுக்குப் பேரச்சம் விளைவிக்கும் வேறு பகைகளும் உண்டு; மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், தொழிற்சாலைகளும் நிறைந்த நகரங்களில் நெருங்கி வாழ நேரும் பொழுது அந்நகர வாழ்விற்கு ஏற்பச் செயற்கைச் சுகாதார முறைகளை அந்நாட்டு மக்கள் கைக்கொள்வதில்லை. அதனால், நோய்கள் பல விரைந்து பரவும். பலர் அவற்றிற்கு இரையாவர்.

காஷ்மீர் மக்களின் வீடுகள் ஆங்குள்ள கடுங்குளிரிலும் தீப்பிடித்து அழிந்துபடும். அஃது அவர் பழக்கத்தினால் நேரும் தொல்லையேயாகும். கடுங்குளிர் தாங்காதவர்கள் கணப்புச் சட்டிகளைத் தங்கள் மார்புகளில் வைத்துக்கொண்டே உறங்குவார்கள் என்றும், அதனால் அவர்கள் புண்பட்டு வருந்துவார்கள் என்றும்

கூறினேமல்லவா ? அக்காரணத்தாலேயே வீடு-களும் தீப்பிடித்து வெந்து சாம்பராவதுண்டு. சிலர் கணப்புச் சட்டி தம் மார்பைச் சுட்டதும் அலறியடித்து எழுவர். அவ்வாறு எழும்-பொழுது சட்டி கீழே விழுந்து உடைந்து-விடும். உடனே தீ நாற்புறத்தும் சிதறிப் பற்றிவிடும். ஒரு வீட்டில் பற்றிய தீ, காற்-றின் உதவி இருக்குமாயின், எளிதில் விட்டு-விடுமா ? அத்தெருவிலுள்ள பல வீடுகளும் அந்-நெருப்பிற்கிரையாகும். ஆகவே, அத்தீயும் காஷ்மீர மக்களுக்குப் பெரும்பகைமையாய் இருந்து வருகிறது. அன்றியும், வெள்ளமும் நிலநடுக்கமும் சில சமயங்களில் காஷ்மீர மக்க-ளுக்குப் பெரும்பகையாய் முடிகின்றன. இதனல் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதும் உண்டு.

## மொழிகள்

காஷ்மீரப் பொதுமக்கள் இந்நாளில் பேசும் மொழி ஒரு தனி மொழி என்று சொல்லுவதற்-கில்லை. அஃது ஆரியம், பாரசீகம், அரபி, பஞ்சாபி, உருது முதலிய பல மொழிச் சொற்-களும் கலந்த கலப்பு மொழியாயுள்ளது. நாட்-டுப்புறத்து மக்கள் தங்கள் தாய் மொழி ஒன்-றையே அறிவார்கள். வணிகர்கள், உருது மொழியும் அறிந்திருப்பார்கள். கற்றறிந்த

பிரிவினர், பாரசீக மொழியும் பயின்றிருப்பர். இந்நாளில் நகர்ப்புறங்களிலுள்ள பள்ளிகளில் ஆங்கில மொழியும் கற்பிக்கப்படுகின்றது.

## படகோட்டிகள்

காஷ்மீர நாட்டு மக்களுள் படகோட்டுபவர் தனித்த பிரிவினராகக் காட்சியளிப்பர். அவர்கள் தங்களைக் குகன் மரபைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்வார்கள். அத்தகைய படகோட்டிகள் சற்றேறக்குறைய நாற்பதினாயிரவர் உண்டு. அவர்களுக்குள்ளும் சாதிப் பிரிவினை உண்டு. எடுத்துக்காட்டாக, ஏரிகளில் மிதக்கும் தோட்டங்களை அமைத்து, அவற்றின் மூலம் வாணிகம் செய்து வளம் பெற வாழ்பவர் படகோட்டிகளில் உயர் வகுப்பினராகக் கருதப்படுவர். படகுகளில் சென்று மீன் பிடிக்கும் தொழில் பூண்டவர் அவருள் தாழ்ந்தவராகக் கருதப்படுவர்.

## நாடோடி வாழ்க்கை

காஷ்மீரில் நாடோடிகளும் உண்டு. நாடோடிகள் உலகெங்கும் இருக்கின்றார்கள். அவர்கள் தாங்கள் வாழும் நாட்டிற்கேற்ற வேறுபட்ட தோற்றங்களையுடையவர்களாயினும், பல வகைகளில் ஒரு தன்மையர்களாய் விளங்கக் காணலாம். அவர்கள் தங்கள் ஆடுமாடுகளுடன் நல்ல மேய்ச்சல் நிலங்களை நாடிச் செல்வார்கள். அவர்-

கள் தங்களுக்குக் கிடைக்கும் கம்பளி மயிர், பால், வெண்ணெய் முதலிய பொருள்களை நாட்டு மக்களிடம் விற்றுப் பொருள் ஈட்டுவார்கள். அவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள்; அச்சம் என்பதையே அறியாதவர்கள். அவர்களில் ஆடவர் பெண்டிர் அனைவரும் உடலுறுதி வாய்ந்தவர்; உணர்ச்சி மிக்க பல்வகைப் பாடல்களைப் பாடி மகிழ்வர். இயற்கையோடொன்றிய அவர்கள் வாழ்வு அவர்களே வகுத்துக்கொண்ட விதி முறைகளுக்குட்பட்டது. அவர்களுக்குத் தலைவன் ஒருவன் உண்டு. அவன் சொற்படியே யாவரும் நடப்பர். குழுவில் அவன் இட்டதே சட்டம்.

## கலையுணர்ச்சி

காஷ்மீர மக்கள் கலையுணர்ச்சி மிக்கவர்கள் என்பதை முன்னரே கூறியுள்ளோம். அவர்கள் காவியக் கலையில் நிகரற்று விளங்கியதற்கு அந்நாட்டுப் பழைய நூல்களே தக்க சான்றுகளாம். இந்து மதத்தினரும் புத்த மதத்தினரும் தனித்தனி பல்கலைக் கழகங்களை அமைத்துக் கவிதையையும் சமயத்தையும் ஒருங்கே வளர்த்தனர். காஷ்மீரத்தின் பழைய தலை நகராகிய **அவந்தி புரத்தில்** இந்துப் பல்கலைக் கழகமொன்றும், **ராஜவிகாரம்** என்னுமிடத்தில் புத்த பல்கலைக் கழகமொன்றும் விளக்கமுற்றிருந்தன என்று

வரலாறு கூறுகின்றது. காவியக் கலையிற்போன்றே ஓவியக் கலையிலும் அவர்கள் பற்றும் பயிற்சியும் மிக்கு விளங்கினமைக்கு அந்நாட்டுச் சால்வைகளே தக்க சான்றுகளாகும். அவர்கள் சிற்பக் கலையிலும் சிறந்து விளங்கினர்கள் என்பதற்குப் பழங்கோயில்கள் சான்றுகளாகும். அவ்வாறே அவர்கள் இன்னிசையிலும் நடனத்திலும் நாடகத்திலும் பற்றுடையவர்களாய் விளங்கினர்கள். இசையில் வல்லவர்களும் நாடகக் கலைஞர்களும் ஊர் ஊராகச் சென்று தங்கள் திறமையைக் காட்டி மக்களை மகிழ்வித்துப் பரிசுகள் பெற்று மீள்வார்கள். இப்பழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

## உணவுப் பொருள்

காஷ்மீர மக்களின் சாதாரண உணவுப் பொருள் அரிசியேயாகும். ஏரிகளைச் சுற்றிலும் பல மைல் வரை வளம் பொருந்திய நெல் வயல்களைக் காணலாம். பார்லி, கோதுமை, வால்விதை முதலிய விதைகளின் மாவு, பால், பழங்கள், முட்டைகள் முதலியவற்றையும் விரும்பியுண்பர்; காய்கறிகளையும் நிறைய உண்பர். அந்நாட்டுக் கால் நடைகளுக்கு உணவுப் பஞ்சம் என்பதே இல்லை. எங்கு நோக்கினும் இயற்கையன்னையின் அருளால் பசும்புல் வெளிகள் காட்சி அளிக்கும்.

Jacket printed at Shanti Press, Madras-1